# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

**MITRA TIMES - Tamil & English Monthly**

| மலர்: IX இதழ்: 3 | ஆகஸ்ட் 2023 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/- |
| --- | --- | --- | --- |
| Vol.: IX Issue: 3 | August 2023 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20 |




மன அழுத்தம் நீங்கிட!

நீ நீயாக இரு!
-ஆசிரியர் கடிதம்

நெய்வேலி என்.எல்.சி
நடப்பது என்ன?

அமெரிக்க மண்ணில் தமிழ் உணர்வு!

## பாராளுமன்றத் தேர்தலுக்கு தயாராகும் அரசியல் கட்சிகள்:
## பரபரப்பான காட்சிகள்!

# INDEPENDENCE DAY
# TO BE PROUD AS INDIAN



Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)

Indian Independence Day is celebrated on August 15th every year to commemorate India's independence from British colonial rule. It marks the day when India gained freedom from British rule after a long struggle for independence."

The night before Independence Day, on August 14, 1947, India's first Prime Minister, Jawaharlal Nehru, delivered a historic speech known as the "Tryst with Destiny" speech. At the stroke of midnight, India officially became an independent nation, free from British rule. There has been a long debate about whether India celebrates the 76th or 77th Independence Day this year. Let's understand and find the right answer using the best logic.

Independence Day is celebrated across India with great enthusiasm and patriotism. This year Independence Day will be celebrated under the campaign Azadi Ka Amrit Mahotsav. The campaign aims to further boost this people's movement through collaborative campaigns and outreach across India and the world. Also, this year Independence Day will mark the end of the 75-week countdown of Amrit Mahtosav which begin on March 12, 2021

Like every year, the Prime Minister of India hoists the national flag at the Red Fort in New Delhi. This event is followed by a speech addressing the nation, highlighting the achievements and challenges of the country. Government buildings, schools, and public places are adorned with the tricolour (saffron, white, and green) of the Indian flag. Cultural programs, parades, and various events are organized to celebrate the day.

In 1757, the East India Company defeated the last Nawab of Bengal in the Battle of Plassey, which marked the beginning of British rule in India. The Indian Rebellion or the First War of Independence took place in 1857 which was a major yet unsuccessful uprising against British rule.

In the year 1885, India's first political party, Indian National Congress was formed. And after the conclusion of World War I in 1918, Indian activists called for self-rule or 'Swaraj'.

In 1929, the Indian National Congress declared 'Purna Swaraj' or the Independence of India at an assembly in Lahore. Finally, after a series of sessions and meetings between the British government and the Indian National Congress, Lord Mountbatten who served as the last viceroy of pre-independent India, agreed to the proposal.

On 15th August 1947, Lord Mountbatten partitioned British India into two new independent nations; India and Pakistan. This marked the first India Independence Day 1947.

People greet each other by saying "Happy Independence Day", distributing sweets, decorating their houses with the tricolor and national flag, and fly kites. People tell stories to children about Independence Day and the struggles of freedom fighters.

India's national flag is a horizontal tricolor of deep saffron (kesaria) at the top, white in the middle and dark green at the bottom in equal proportion. The ratio of the flag's width to its length is two to three. A navy-blue wheel in the center of the white band represents the chakra. Its design is that of the wheel which appears on the abacus of the Sarnath Lion Capital of Ashoka. Its diameter approximates to the white band's width and it has 24 spokes.

India's first prime minister, Jawaharlal Nehru raised the National Flag in 1947. The flag was raised at Lahori Gate of Red Fort which is located in Delhi on 15th August 1947.

Every year after the Honorable Prime Minister, raises the National Flag at Red Fort in Old Delhi, Independence Day is celebrated. A live telecasted speech of the Prime Minister is followed after the ceremony, in which the prime minister addresses the whole nation. In the speech, the major accomplishments of India in the previous year are recounted and future plans for the country are shared by the Prime Minister The speech is followed by various functions, parades, and cultural shows all over India.



# நீ நீயாக இரு!

**அ**ன்புடையீர் வணக்கம்!

உலகில் மனிதனுக்கு மட்டுமல்ல. இயற்கைக்கும் தனித்தனி குணங்கள் உண்டு. அந்த குணங்கள் அதே குணங்கள் உடைய மற்றொரு பொருளோடு சேரும்போது எதிர்வினை ஏதும் இருக்காது. ஆனால் வெவ்வேறு குணங்களை கொண்ட பொருள்கள் ஒன்று சேரும்போது விளைவுகள் வேறு மாதிரியாக ஆக இருக்கும்.

நெருப்பை நெருப்பு அணைக்கும் போது எதிர்வினை ஏதுமில்லை. நீரை நீர் அணைக்கும் போது எதிர்வினை ஏதுமில்லை. ஆனால் நீரை கொதிக்க வைக்க நெருப்பு பயன்படும். நெருப்பை அணைக்க நீர் பயன்படுத்தப்படும். இந்த இயற்கை மாறுபாடுகள் மனிதனுக்கும் பொருந்தும்.

தனக்கென ஒரு தனி பாணியை வகுத்துக் கொண்டு அதற்கான வாழ்பவர்கள் பலர் இங்கு உண்டு. சேராத நபர்களோடு சேர்வதனால் சிலருக்கு சேதாரம் ஏற்படும். ஆகையினால் தான் "சேராத இடம் தன்னில் சேர வேண்டாம்"என்று அவ்வையார் சொன்னார்.

நல்லவர்கள் கெட்டவரோடு சேரும்போது கெட்டவர்களை திருத்தும் வாய்ப்பு உண்டு. அந்த கெட்டவர்களோடு சேர்ந்து தானும் கெட்டுப் போவதும் உண்டு. எனவே ஒவ்வொருவரும் அவரவர் குணத்திற்கு ஏற்ப அடுத்தவரோடு பழக வேண்டும். அதைத்தான் பெரியவர்கள் பல்வேறு புத்திமதிகளை நமக்குச் சொல்லி இருக்கிறார்கள். அவற்றை புத்திமதியாக கருதாமல் நம்முடைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் வழியாக தெரிந்து கொண்டால் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். சிலருக்கு புத்திமதி சொல்வது ஆகாது. ஆனாலும் நீ நீயாக இரு என்று பெரியவர்கள் சொன்னதில் அர்த்தம் இல்லாமல் இல்லை.




உன்னை வாழ்த்த மனம் இல்லாதவர்கள் இருப்பார்கள். அவர்களைப் பற்றி கவலைப்படாதே.

நீ எதை செய்தாலும் அதில் ஒரு குறையை கண்டுபிடிக்கக்கூடிய மனிதர்களும் இருந்து கொண்டுதான் இருப்பார்கள். அதையும் பெரிது பண்ணாதே.!

உன் லட்சியம் எதுவோ அதை நோக்கி பயணம் போ. ஒன்றை மட்டும் தெரிந்து கொள்....

ஒவ்வொரு மனிதனும் தனித்தனி ஜென்மங்கள், தனித்தனி பிறவிகள் தனித்தனி ஆன்மாக்கள்.

அவர்களுக்கென்று தனித்தனி ஆசாபாசங்கள்இருக்கும். குணங்களும் இருக்கும். அதன் வழியில் தான் அவர்களின் பயணமும் இருக்கும். அவர்களை ஒழுங்கு படுத்துகிறேன் என்று வேதனைகளை சுமந்து கொள்ளாதே. அவர்கள் போகும் வரை போகட்டும். போய் ஒரு அனுபவத்தை பெற்றபின் திரும்பி வருவார்கள்.

அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும். அவர்கள் போன பாதை நல்லதா? கெட்டதா? என்பதை அவர்களாக உணர்ந்தால்தான் அவர்களுக்கு ஒரு உண்மை தெரியும். அந்த உண்மையை நீ முன்கூட்டியே சொன்னால் உன்னை அவர்களுக்கு பிடிக்காது.

உடன் பிறந்தவர்களாக இருந்தாலும், நண்பர்களாக இருந்தாலும், கணவன், மனைவியாக இருந்தாலும், பெற்ற குழந்தைகளாக இருந்தாலும், பேரன் பேத்திகளாக இருந்தாலும், எந்த உறவுகளாக இருந்தாலும், அவர்களுக்கு என்று இருக்கும் குணம் ஒரு போதும் மாறாது.

செயற்கையாக ஒரு குணத்தை உருவாக்கி உன்னிடம் அன்பை காட்டினாலும் தான் யார்? தன் குணம் என்ன?, என்பதை ஒரு நாள் வெளிப்படுத்தி விடுவார்கள். எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தோடு இருந்து கொள்ள பழகிக் கொள்.

நாம் வந்து போகும் உலகத்தில் பிறந்திருக்கிறோம். அவரவர்களுக்கு என்ன வேஷம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைத்தான் செய்து கொண்டிருக் கிறோம். அதைத் தவிர நாம் வேறு எதையும் செய்து காட்ட முடியாது.

எல்லையில்லாத அன்பை



வைத்திருந்தேன் என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று புலம்பிக் கொண்டு இருக்காதே. கடலுக்கும் ஒரு எல்லை வைத்திருக்கிறான் கடவுள்,... அதையும் மீறி சிலவேளைகளில் இறைவன் வகுத்த எல்லையை கடல் தாண்டி விடுகிறது,... அது போல் இயற்கையின் சுபாவங்களைப் போல் மனித இயற்கை சுபாவங்கள் சில நேரங்களில் தங்களை வெளிப்படுத்தி விடும்.

நீ உன்னை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாயோ அப்படி வைத்துக் கொண்டு வாழப்பழகிக் கொள். அதில் நன்மை வந்தாலும், தீமை வந்தாலும் உனக்கும் ஒரு அனுபவம் கிடைக்கும்... அதை வைத்து உன்னையும் திருத்திக் கொள்ளலாம்.

தைரியமும் தன்னம்பிக்கையும் தான் ஒரு மனிதனை உலகத்தில் வாழ வைக்கும் என்ற உண்மையை உணர்ந்துகொள்.இந்த பக்குவத்தை அடைந்து விட்டால் எத்துன்பமும் உன்னை நெருங்காது என்பதை உணர்ந்துகொள்.

இப்படி நம்முடைய முன்னோர்கள் தெரிவித்த கருத்துக்களை நாம் உள்வாங்கிக் கொண்டு நமக்கென இருக்கின்ற தனித்தன்மையை வெளிப்படுத்தி உலகத்தோடு ஒன்றிணைந்து வாழலாம் .அதே நேரத்தில் பொதுவான ஒரு விவகாரத்துக்கு அடுத்தவரோடு இணைந்து செல்வதால் நன்மை நடக்கும் என்றால் அதற்காக அடுத்தவரோடு இணைவதில் தவறில்லை. நல்லதே செய்வோம்! நல்லதே நினைப்போம்! நல்லதே நடக்கும்!

– எம்.எஸ்.மூர்த்தி

# உள்ளே...




பாராளுமன்றத் தேர்தலுக்கு தயாராகும் அரசியல் கட்சிகள்: பரபரப்பான காட்சிகள்! — 9




தக்காளி விற்று கோடீஸ்வரர் ஆனவர்கள்! — 11



புறம் பேசுதல் அறம் ஆகாது! — 19



வாழ்நாள் முழுவதும் வாசிப்பை நேசித்தவர் பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர்! — 34



உன்னைச் சுற்றி உன் வாழ்க்கை நிலை! — 47



முன்னோர்கள் வாழ்ந்த ஆரோக்கிய வாழ்க்கை! — 50

உன்னால் முடியும் பெண்ணே!

# யானைக் குட்டிகளை வளர்த்தெடுக்கும் தாய் பெள்ளி!

உலகத்தின் பார்வை இன்று தமிழகத்தின் மீது குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு தம்பதியர் மீது கவனம் திரும்பி அவர்களைப் பாராட்டி கொண்டாடுகிறது. அவர்கள் செய்த சாதனை யானை குட்டிகளை தன் குழந்தைகளைப் போல பராமரித்து பாதுகாத்து வருவதால் இந்த பாராட்டு.

முதுமலை புலிகள் காப்பகம் ஆசியாவிலேயே நூற்றாண்டு ஆண்டுகளை கடந்த பழமை வாய்ந்த காப்பகம் நீலகிரியில் அமைந்துள்ளதாகும். இங்குள்ள வளர்ப்பு யானைகள் முகாமில் சுமார் 28 வளர்ப்பு யானைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக சில ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணகிரி வனப்பகுதியில் இருந்து தாயைப் பிரிந்து சுற்றி திரிந்த பிறந்து 11 மாதங்கள் ஆன ரகு என்ற குட்டி யானையும், சத்தியமங்கலம் வனப்பகுதியில் இருந்து தாயிடமிருந்து பிரிந்த 5 மாதங்களான பொம்மி யானையையும் முதுமலை வளர்ப்பு யானைகள் முகாமிற்கு கொண்டு வரப்பட்டு தொடர்ந்து பராமரித்து வந்தனர். இந்த யானையை பராமரிப்பதற்காக கணவன் மனைவியான பொம்மன் மற்றும் பெள்ளி என இரு பாகன்கள் பணியார்த்தப்பட்டு இருவரும் இந்த யானைகளை பராமரித்து, வளர்த்து வந்தனர். கடந்த 2019 ஆம் ஆண்டு முதுமலை தெப்பகாடு புலிகள் காப்பக யானைகள் முகாமில் உள்ள ரகு ,பொம்மி என்ற இரு யானைகள் மற்றும் இதனை பாதுகாத்து வளர்த்த பொம்மன் பெள்ளி ஆகியோரை வைத்து யானை குட்டிகளை பராமரித்து வளர்ப்பது குறித்த The Elephant Whisperers என்ற ஆவணப்படம் எடுக்கப்பட்டது.

சமீபத்தில் இந்த ஆவணப்படம் ஆஸ்கர் விருது பெற்றது. விருது பெற்றது முதல் பிரதமர், குடியரசு தலைவர், முதலமைச்சர் வரை அனைவரிடத்திலும் படத்தை இயக்கிய கார்த்தகி கன்சாவுலஸ், படத்தில் நடித்த தம்பதிகள் 2 யானைகள் என அனைவரும் வாழ்த்து பெற்று வந்தனர். இந்த நிலையில் அடுத்த மாதம் 3ம் தேதி சென்னையில் நடைபெற உள்ள ஆசிய அளவிலான ஹாக்கி பந்தயத்திற்கு விளம்பரம் மற்றும் சின்னம் அறிவிக்கப்பட்டது. இதில் ஆஸ்கர் படத்தில் நடித்த யானை போன்ற உருவமும் அதன் டீசர்ட்டில் யானைகளை பராமரித்த பொம்மன் என்பவரின் பெயரும் இடம் பெற்றுள்ளது. ஆஸ்கர் விருது கிடைத்த பிறகு இந்த படத்தில் நடித்த முதுமலை தெப்பக்காடு பகுதியை சேர்ந்த பாகன் பொம்மன், பெள்ளி தம்பதியினர் உலக அளவில் புகழ் பெற்று விட்டனர். அவர்களை பல்வேறு தரப்பினரும் பாராட்டினர். கடந்த ஏப்ரல் 9ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி முதுமலைக்கு வருகை புரிந்து 2 பேரையும் பாராட்டினார். தொடர்ந்து நாடு முழுவதும் பொம்மன், பெள்ளிக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டு வாழ்த்துகளை தெரிவித்தனர். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினும் பொம்மன், பெள்ளி ஆகியோரை நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்து பாராட்டு கேடயமும், ரூ.1 லட்சத்திற்கான காசோலையும் வழங்கினார்.



தற்காலிக யானை பராமரிப்பாளராக பணியாற்றி வரும் வி.பெள்ளி, அனாதையான யானைக் குட்டிகளை வெற்றிகரமாக மீட்டெடுப்பதில் அவரது அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பான சேவையை கருத்தில் கொண்டு, தெப்பக்காடு யானைகள் முகாமில் காவடியாக நியமிக்க தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டு, அதற்கான பணிநியமன ஆணையினை முதல்வர் நேற்று வி. பெள்ளிக்கு வழங்கினார். "கடந்த மாதம் 18ஆம் தேதி குடியரசுத்தலைவர் திரௌபதி முர்முவை டெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் பொம்மன், பெள்ளி சந்தித்து பாராட்டுகள் பெற்றனர். இதனிடையே ஆகஸ்ட் 5ஆம் தேதி திரௌபதி முர்மு முதுமலை தெப்பக்காடு முகாமிற்கு வர உள்ளார்..

இத்தகைய பெருமையை தங்களுக்கு கிடைத்திருப்பது குறித்து திருமதி. பெள்ளி குறிப்பிடுகையில், "ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. யானைக்குட்டியை மட்டும் என் கையில் கொடுக்காமல்

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 09 ஆகஸ்ட் 2023 டைம்ஸ்- 3

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
கலைமாமணி **நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
DR.**ப.குணசீலன்** எம்.பி.ஏ.,
9962531325

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**கவி சுகந்தீனா /துடுப்பதி ரகுநாதன்**

இணையதள செய்தியாளர்
**பொன்.சாம்பசிவம்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**
**6374285644**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com




இருந்திருந்தால் இது எனக்கு கிடைத்திருக்காது. யானைக்குட்டி எங்களிடம் குழந்தைபோன்று பழகியிருக்கிறது. அதை அப்படியே ஆவணப்படமாக எடுத்துவிட்டார்கள். இன்று விருது கிடைத்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. எங்களுடைய முதுமலை முகாமிற்கே சந்தோஷம்.

யானைக்குட்டிகளை வளர்ப்பதில் மிகுந்த கஷ்டங்களை சந்தித்தேன். வீட்டில் ஒரு கஷ்டம் என்றால் அதைப் பார்க்கமுடியாது. இறப்புக்குக்கூட போகமுடியாது. எங்களுடைய பிள்ளையே நெருப்பில் எரிந்தபோதுகூட போகமுடியாமல் யானைக்குட்டியை பிடித்துக்கொண்டு காட்டுக்குள் நின்று அழுதிருக்கிறேன். குட்டியும் ஒரு குழந்தைதானே. அதை விட்டுவிட்டு போகமுடியாது. அதனை கூட்டிவந்து அதனுடைய இடத்தில் கட்டி வைத்துவிட்டுத்தான் என்னால் போகமுடியும். அப்படி குட்டியை கூட்டிவந்து கட்டி வைத்துவிட்டு, அதனை பார்த்துக்கொள்ள வேறு ஒரு ஆள் வைத்துவிட்டு பிறகுதான் என்னுடைய பிள்ளையையே சென்று பார்த்தேன். நான் பெற்ற பிள்ளை இறந்தபோதுகூட மற்றவர்கள்தான் எடுத்துக்கொண்டுபோனார்கள். எனது கை உடைந்தபோதுகூட குட்டியை விட்டுவிட்டு நான் போகவில்லை. இதுபோல் நிறைய கஷ்டப்பட்டிருக்கிறேன். இப்படி கஷ்டப்பட்டுத்தான் ரகுவை வளர்த்தேன். ரகு வளர்ந்துவரும்போதுதான் பொம்மி வந்தாள். அதன்பிறகு 6 மாதங்கள் வேலை செய்யாமல் இருந்தேன். பிறகு மீண்டும் என்னை வந்து வேலைக்கு சேரச்சொன்னார்கள். வருகிறவர்கள் எல்லோரும் எனக்கு யானைக்குட்டி எவ்வளவு பழக்கம் என்று கேட்பார்கள். அவை எனக்கு குழந்தைகள் என்று சொல்லுவேன். நான் சொல்கிற பேச்சையெல்லாம் கேட்கும்.

என் பேத்தி, பேரனைப்போலத்தான் யானைக்குட்டிகளும் எனக்கு. இதுவரை அவற்றை நான் அடித்ததே இல்லை. குழந்தைகளிடம் பேசி மட்டும்தான் அவற்றை பழக்கி வைத்திருக்கிறேன் என்று கூறுவேன்” என்று தனது மகிழ்ச்சியை நெகிழ்ச்சியுடன் பகிர்ந்துள்ளார்.

ஒரு பெண்ணாக குழந்தை வளர்ப்பது போல் யானை குட்டிகளை வளர்க்கும் திருமதி .பெள்ளி அவர்களின் முயற்சிக்கு நாமும் மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

**- சுஜாதா மூர்த்தி**

# பாராளுமன்றத் தேர்தலுக்கு தயாராகும் அரசியல் கட்சிகள்:

## பரபரப்பான காட்சிகள்!



**2024** ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெற உள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக பா.ஜ.க தனிப்பெரும் பெரும்பான்மையோடு ஆட்சி நடத்தி வருகிறது அந்தக் கட்சியின் ஆட்சியை யாராலும் வீழ்த்த முடியாது என்ற சூழ்நிலையை பா.ஜ.க உருவாக்கி வைத்திருந்தது. தேசபக்தி தெய்வ பக்தி இரண்டையும் மக்களிடத்திலே பரப்பி அது தன் கட்சிக்கு உரித்தான அங்கீகாரம் என்று பாஜக எண்ணிய காரணத்தாலும் அதை எதிர்க்கின்ற கட்சிகளுக்கு இடையே ஒற்றுமை இல்லாமல் தனித்தனியே பிரிந்து இருந்த காரணத்தாலும் பிரதமர் மோடியே மீண்டும் மூன்றாவது முறையாக பிரதமராக ஆவார் என்கிற குரல் நாடு முழுவதும் ஒலித்தது. "எங்களை அசைக்க யாராலும் முடியாது" என்று பேசி வந்த பா.ஜ.க கொஞ்சம் கொஞ்சமாக எதிர்க்கட்சியின் வலிமையை பார்த்து தன்னுடைய நிலைமையை வலுவாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டது.

"இந்தத் தேர்தலில் பாஜகவை ஒன்றிணைந்து வீழ்த்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகின்றன. பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் ஆகியோர் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் முன்னெடுப்பை மேற்கொண்டு வருகிறார்கள். எதிர்க்கட்சி தலைவர்களின் முதல் கூட்டம் பிகார் தலைநகர் பாட்னாவில் நடைபெற்றது"

பெங்களூரில் எதிர்க்கட்சிகளின் இரண்டாவது ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தின் முடிவில் எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு இந்தியா என்று பெயர் வைக்கப்பட்டு உள்ளது. தேசிய அளவில் மாநில கட்சிகள், எதிர்க்கட்சிகள் பாஜகவிற்கு எதிராக கைகோர்க்க தொடங்கி உள்ளன. திமுக, காங்கிரஸ் , ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஒன்று சேர்ந்து நாடாளுமன்ற தேர்தலை ஒன்றாக எதிர்கொள்வது தொடர்பாக ஆலோசனை செய்தனர்.

கடந்த கூட்டத்தில் 14 கட்சிகள் பீகாரில் உள்ள பாட்னாவில் கலந்து கொண்ட நிலையில் இந்த முறை 26 கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொண்டன. ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட முக்கிய கட்சிகளும் இதில் பங்கேற்க முடிவு செய்தன.



இரண்டாம் கட்ட கூட்டத்தில் சோனியா காந்தி, ராகுல் காந்தி, மு க ஸ்டாலின், நிதிஷ் குமார், மம்தா பானர்ஜி, திருமாவளவன் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.

இதில்தான் எதிர்க்கட்சிகள் கூட்டணிக்கு இந்தியா என்று பெயர் வைக்கப்பட்டு உள்ளது. இதையடுத்து நேற்று இணையம் முழுக்க இந்தியா vs மோடி, இந்தியா vs பாஜக, இந்தியா vs என்டிஏ என்றெல்லாம் டிரெண்ட் செய்யப்பட்டது. இந்தியா பிடிக்கவில்லையா பாகிஸ்தானுக்கு போ என்று முதல்முறையாக காங்கிரஸ் கட்சியினர் பாஜகவை பார்த்து சொல்லும் அளவிற்கு ஒரே நாளில் அதிரடி மாற்றங்கள் நடந்து உள்ளன.

I - Indian

N National

D - Developmental

I - Inclusive

A - Alliance.

என்று தங்கள் கூட்டணியின் பெயருக்கு விளக்கம் அளித்துள்ள எதிர்க்கட்சி கூட்டணிகள் தங்களை யாரும் தேச விரோதிகள் என்று சொல்ல முடியாது என்று உறுதிபட சொல்கிறார்கள்.

இப்படி எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாக இரண்டு முறை கூட்டங்களை கூட்டி விட்ட பிறகு தங்களுடைய கூட்டணி எத்தகையது என்பதை காட்ட மோடி தலைமையில் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் NDA கூட்டணி கட்சியின் ஆலோசனை கூட்டம் எதிர்க்கட்சிகள் நடத்திய அதே தினத்தில் டில்லியில் நடைபெற்றது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி அமைத்த கட்சிகள், மாநில சட்டசபைத் தேர்தல்களில் கூட்டணி வைத்த கட்சிகள், பிளவுபட்ட கட்சிகளுடைய ஒரு பிரிவின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு அவர்கள் கலந்துகொண்டு இருக்கிறார்கள்."

"தமிழ்நாட்டை பொறுத்தவரை அதிமுக, பாமக, தமிழ் மாநில காங்கிரஸ், புதிய தமிழகம், ஐஜேகே, தமிழ்நாடு மக்கள் முன்னேற்ற கழகம், புதிய நீதி கட்சி உள்ளிட்டவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதில் 38 கட்சிகள் பங்கேற்கும் என பாஜக தேசிய தலைவர் ஜேபி நட்டா அறிவித்த நிலையில், ஒரு எம்பி கூட இல்லாத பல கட்சிகளுக்கு இந்த கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டு இருப்பதாக விமர்சனங்கள் எழுந்தன". இக்கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக பிரதமர் மோடி வெளியிட்ட டுவிட்டர் பதிவில், "நாடு முழுவதும் இருந்து தலைவர்கள் பங்கேற்க வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. எங்கள் கூட்டணி பல்வேறு சோதனைகளை கடந்து, பல தடைகளை கடந்த ஒரு வெற்றிக்கூட்டணி. தேசிய வளர்ச்சிக்கும் மாநிலங்களின் நோக்கங்களை நிறைவேற்றவும் உருவானது நமது கூட்டணி," என குறிப்பிட்டார்.

இன்னும் பத்து மாதங்கள் தேர்தல் வருவதற்கு உள்ள நிலையில் அகில இந்திய அளவில் அதற்கான ஏற்பாடுகளை அரசியல் கட்சிகள் தொடங்கிவிட்டன. இந்த வருட இறுதியில் நடைபெற உள்ள மாநில சட்டசபை தேர்தலில் வெளியாக உள்ள தீர்ப்பை பொறுத்து தான் எவ்வளவு விரைவில் தேர்தல் தேதிக்கான அறிவிப்பு வரும் என்பது தெரியும். எது எப்படி ஆயினும் அரசியல் கட்சிகள் தேர்தலை சந்திக்க தயாராகிவிட்டன என்பதை களத்தில் நாம் காண முடிகிறது.

# என்.எல்.சி நடப்பது என்ன?

நெய்வேலியில் உள்ள மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடட் (என்எல்சி) நிறுவனம் இயங்கி வருகிறது. 1956ல் தொடங்கப்பட்ட என்எல்சி நிறுவனம் நெய்வேலி பகுதியில் 64,000 ஏக்கர் பகுதியில் மூன்று திறந்த வெளிச் சுரங்கங்களை அமைத்துள்ளது என தமிழ்நாடு அரசின் கொள்கை குறிப்பு கூறுகிறது.

இந்த நிலக்கரி, என்எல்சியின் நான்கு அனல்மின் நிலையங்களில் மின்சாரத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் வெறும் 600 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யும் நிறுவனமாக இருந்த என்எல்சி தற்போது 6,000 மெகாவாட் தயாரிக்கும் நிறுவனமாக வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த நிதியாண்டில் தான் இதுநாள்வரை இல்லாத அளவில், அதிபட்ச மின் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

1950களில் தொடங்கி 2023 வரை 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் என்எல்சியின் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்காகக் காலிசெய்யப்பட்டுள்ளன. அதில் சுரங்கம் 1, சுரங்கம் 1A மற்றும் சுரங்கம் 2 ஆகியவை செயல்படுகின்றன. தற்போது மீண்டும் 197 ஏக்கர் நிலம் தேவை என்றும் இந்த நிலங்களில் சுரங்கம் அமைக்கப்படவில்லை எனில் தமிழ்நாட்டிற்குத் தேவையான மின்சாரத்தை வழங்குவதில் சிக்கல் ஏற்படும் என்றும் என்எல்சி நிர்வாகம் கூறுகிறது.

தற்போது சுரங்க விரிவாக்கப் பணிக்காக




நெய்வேலியில் உள்ள கிராமங்களில் நிலத்தைக் கையகப்படுத்தும் முயற்சியில் என்எல்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே கையகப்படுத்தபட்ட நிலங்களில் வசித்தவர்களுக்கு உரிய இழப்பீடு தரப்படவில்லை என்றும் ஒப்பந்தப்படி வேலை தரவில்லை என்றும் குற்றம் சாட்டும் கிராமவாசிகள், நிலம் கையகப்படுத்தலுக்கு எதிராகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தற்காலிகமாக நிலம் கையகப்படுத்தும் பணி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அவ்வப்போது, சாலை மறியல், ஆர்ப்பாட்டம் எனப் பல வகைகளில் போராட்டம் நெய்வேலி பகுதியில் உள்ள கிராமங்களில் நடைபெற்றுவருகின்றது.

தொடர்ந்து குரல்கொடுத்து இந்தப் போராட்டத்தை



முன் நின்று நடத்துவது எங்கள் பாட்டாளி மக்கள் கட்சிதான் என்று அதன் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சர் ஆன அன்புமணி ராமதாஸ் தெரிவிக்கிறார்.

"என்.எல்.சி. விவகாரத்தில் பாமக 40 ஆண்டுகளாக போராடி வருகிறது. பாமக எப்போதும் விவசாயிகள் பக்கமும், தமிழ்நாட்டு மக்கள் பக்கமும் தான் நிற்கும். நடப்பு ஆண்டில் உணவுப் பற்றாக்குறை இருக்கும் என ஐநா சபை கூறுகிறது. விளைநிலங்களை அழித்தால் வருங்காலத்தில் சோறு கிடைக்காது. 15 ஆண்டுகளுக்கு முன்பு வேறு கண்ணோட்டத்தில் இருந்தோம். நமது தேவையை பூர்த்தி செய்து விட்ட பிறகு, என்.எல்.சி. அளிக்கும் 800 மெகாவாட் மின்சாரத்திற்காக விளை நிலங்களை கொடுக்க வேண்டுமா?



எடப்பாடி பழனிசாமி சொல்வது போன்று நல்ல விலை, வேலையை கொடுத்தால் சரியாகிவிடுமா?. எடப்பாடி பழனிசாமி தனது நிலத்தை நல்ல விலைக்கு கேட்டால் கொடுப்பாரா?. நெய்வேலி நிலக்கரி நிறுவனம் ஒரு கோடி ரூபாய் இழப்பீடு கொடுத்தாலும் தமிழத்திற்கு அது தேவை இல்லை. 1989க்குப் பிறகு என்.எல்.சி. நிறுவனம் வேலையே கொடுக்கவில்லை. என்.எல்.சி.யை தனியாரிடம் விற்கப்போவதாக அறிவித்த பிறகும், தமிழ்நாடு அரசு ஏன் சாதகமாக செயல்படுகிறது? என்பது புரியவில்லை.



எனக்கு மொழி அடையாளம், ஊர் அடையாளம் உள்ளது. கடலூர் மாவட்டத்தை அழிக்க நினைப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. கதிர் வந்த நெல்லை அழிப்பது கருவை அழிப்பதற்கு சமம். என்.எல்.சி. தொடர்பாக அடிப்படை புரிதல் கட்சிகளுக்கு இல்லை. எல்லா கட்சிகளுக்கும் புரிதல் என்பது வேண்டும். காவிரி டெல்டா பகுதியிலே தான் என்.எல்.சி. விரிவாக்கம் செய்கின்றனர். விவசாயிகள் தொடர்ந்து போராட வேண்டும். மாநில அரசும், மத்திய அரசும் திட்டத்தைக் கைவிட வேண்டும்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தனது நிலத்திற்கு பணம் கொடுத்தால் கொடுத்து விடுவாரா?. நாங்கள் ஆட்சியில் இருந்திருந்தால் ஒரு பிடி மண்ணைக் கூட என்.எல்.சி.க்கு கொடுத்திருக்க மாட்டோம். விளைநிலங்கள் கையகப்படுத்தப்படுவதைக் கண்டித்து நாளை என்எல்சி முற்றுகை போராட்டம் நடத்த உள்ளோம். என்எல்சி வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தியும், நெய்வேலி ஆர்ச் கேட் பகுதியில் போராட்டம் நடத்தப்படும்."என்று அறிவித்து மறுநாள் போராட்டத்தில் இறங்கினார்.

இதைத்தொடர்ந்து என்எல்சி நிலம் கையகப்படுத்துவதைக் கைவிடக்கோரி பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. தலைமையில் என்எல்சி நிறுவனத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது. காவல்துறையினர் அன்புமணி ராமதாசை கைது செய்தபோது போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

காவல்துறையினர் வன்முறையை கட்டுப்படுத்த தடியடி நடத்தி கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி வன்முறையாளர்களை விரட்டியடித்தனர். இதனால் நெய்வேலி என்எல்சி நிறுவனம் அருகே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. காவல்துறையினர் வன்முறையில் ஈடுபட்டதாக 28 பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 28 பேரும் நீதிபதி முன் முன்னிறுத்தப்பட்டு 28 பேருக்கும் 15 நாட்கள் நீதிமன்ற காவல் விதிக்கப்பட்டுள்ளது. தற்போது, 28 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட 28 பேரில் 2 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக மாறிவிட்ட நிலையில் என்.எல்.சி நிறுவனம் இனி தேவையில்லை. உடனடியாக அந்த நிறுவனத்தை தமிழ்நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பது தான் கடலூர் மாவட்ட மக்களின் விருப்பம் ஆகும். இதை தமிழக அரசு புரிந்து கொண்டு மக்களின் பக்கம் நிற்க வேண்டும். மாறாக என்.எல்.சியின் அத்துமீறல்களுக்கு துணை போகக் கூடாது.

மீண்டும், மீண்டும் நான் கூற விரும்புவது என்னவென்றால் பாட்டாளி மக்கள் கட்சி அடக்குமுறைகளை எதிர்கொண்டு வளர்ந்த கட்சி. கைது, தடியடி, கண்ணீர்புகை குண்டு வீச்சு போன்ற அடக்குமுறைகளை ஏவுவதன் மூலம் பா.ம.க.வை கட்டுப்படுத்த முடியாது. வேளாண் விளை நிலங்கள் கையகப்படுத்தப்படுவது கைவிடப்பட வேண்டும்; என்.எல்.சி. நிறுவனம் தமிழ்நாட்டில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து ஒரு போதும் பின்வாங்காது. இறுதி வெற்றி கிடைக்கும் வரை அறவழியில் போராட்டம் தொடரும்", என்று அன்புமணி ராமதாஸ் உறுதியாக கூறுகிறார்.

– தம்பி முருகானந்தம்

# தக்காளி விற்று கோடீஸ்வரர் ஆனவர்கள்!



தக்காளி விலை ஏற்றத்தை தாய்மார்கள் ஏக்கத்தோடு பார்க்கும் அதே வேளையில் அதே தக்காளியை விற்று கோட்டீஸ்வரர் ஆனவர்களை பார்த்து பெருமூச்சு விடுகிறார்கள் வேலை இல்லாத பட்டதாரிகள்.

இந்தியா முழுக்கவே தக்காளியின் விலை கடந்த சில தினங்களாக கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. இதனால் நடுத்தர வர்க்கம் முதற்கொண்டு பிரபலங்கள் வரை பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் தக்காளியின் விலை ஏற்றத்தால் ஒருசில விவசாயிகள் லட்சக் கணக்கில் சம்பாதித்து மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அந்த வகையில் எப்போதாவது நடக்கும் இந்த அதிசய சம்பவம் ஊடகங்களில் பேசு பொருளாகி வருகிறது.

அந்த வகையில் மகாராஷ்டிரா மாநிலம் புனே மாவட்டத்திலுள்ள ஜுன்னா எனும் பகுதியில் வசித்துவரும் விவசாயி ஒருவர் ஒரே வாரத்தில் தக்காளி விற்று 1.5 கோடி ரூபாய் பணம் ஈட்டியுள்ளார். இதுகுறித்த தகவல் பலரையும் ஆச்சர்யப்படுத்தி இருக்கிறது.



ஜுன்னே பகுதியில் வசித்துவரும் விவசாயி துக்காராம் பாகோஜி கயாகர் என்பவருக்கு 18 ஏக்கர் நிலம் இருந்துவந்த நிலையில் அதில் 12 ஏக்கர் நிலத்தில் தனது மகன் ஈஸ்வர் கயாகர் மற்றும் மருமகள் சோனாலியின் உதவியுடன் தக்காளி பயிரிட்டுள்ளார். 3 மாதங்களுக்கு முன்பு அவர் பயிரிட்ட நிலையில் அதில் உற்பத்தியை பெற்று வருகிறார். இதனால் 13,000 தக்காளி பெட்டிகளை விற்பனை செய்து இதுவரை அவர் 1.5 கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

புனே அடுத்து ஜுன்னா பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் தக்காளி விளைச்சலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அதில் ஒருசில விவசாயிகள் தற்போது லட்சக்கணக்கில் சம்பாதித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் 12 ஏக்கர் பரப்பளவில் தக்காளி விளைச்சல் செய்துவரும் துக்காராம் தற்போது நாராயண்கஞ்ச் பகுதியில்

இயங்கிவரும் வேளாண் விளைபொருள் சந்தையில் தனது பொருட்களை விற்பனை செய்துவருகிறார். அந்த வகையில் 20 கிலோ கொண்ட ஒரு தக்காளி பெட்டிக்கு தற்போது 2,500 விலை வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் 900 பெட்டிகளை விற்ற அவர் ஒரே முறையில் 18 லட்சத்தை வருமானமாக ஈட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக தக்காளி விற்பனை செய்துவரும் துக்காராம் தனது விளைபொருட்கள் முதலில் ரூ.1,000 இல் ஆரம்பித்து தற்போது 2,500 வரை விற்பனை ஆகிவருவதாகத் தெரிவித்துள்ளார். அதாவது துக்காராம் தற்போது விற்கும் ஒரு கிலோ தக்காளியின் விலை குறைந்தபட்சம் ரூ.125 என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு கர்நாடகத்தைச் சேர்ந்த விவசாயி ராஜசேகர் ரெட்டி தக்காளி உற்பத்தியில் ரூ.36 லட்சம் வருமானம் ஈட்டியிருந்தார். இதையடுத்து அவர் மர்மமான முறையில் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் திடீரென தக்காளி விளைச்சலால் பணக்காரர் ஆகியிருக்கும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு அவசியம் என்றும் சில தரப்புகளில் இருந்து கருத்துகள் கூறப்படுகின்றன.

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் கரகமண்டல கிராமத்தைச் சேர்ந்தவர் சந்திரமௌலி. 48 வயதான இந்த விவசாயி தக்காளி பயிரிட்டு நான்கு கோடி ரூபாய்க்கு விற்பனை செய்ததாக செய்தி வெளியாகியுள்ளது. தமிழகத்தில் அப்படி யாரும் தக்காளியை விற்று பணம் சம்பாதித்த செய்தி வரவில்லை..



# தமிழ்க் கவிஞரின் தாய்லாந்து பயணம்!

கழுத்தில் ஆரமாய்க் கணபதி அலங்கரிப்பார்
சகலரும் மதிப்பது சாலை விதிகள்
கண்ணில் தென்படக் காவலர் அரிதே
ஒலிக்கும் வாகனம் ஒன்றும் காணலியே!

உடையில் சிக்கனம் இருபாலர் உரிமையாம்
அஃறிணை அனைத்தும் ஆசை உணவாம்
இருகரம் கூப்பி சிரம் தாழ்த்தி
புன்னகைத்து வணங்குதல் பொது வழக்காம்!
சந்து பொந்துகளும் சுத்தம் காட்டுமாம்
விலங்குகள் விரும்பாதவை சாலையும் தெருவுமே
கடலுக்குள் முளைத்து ஓங்கிநிற்கும் மலைகள்
தேகம் பிடித்துவிட தேர்ந்த கலைஞர்கள்!

அசையா நீரில் அங்காடி மிதக்குதாம்
பிறமொழி பேசாமை பெரு விரதமாம்
ஆங்காங்கே ஆலிலையில் அரசர் தரிசனமாம்
பெருவளாக முகப்புதோறும் நான்முகன் புன்முறுவலாம்!

நாடுமுழுதும் புத்தரின் கொலு வீற்றிருப்பாம்
காணும் இடந்தோறும் கட்டடங்கள் வான்முட்டுமே
வெய்யோன் வருணன் கண்ணாமூச்சி ஆட்டமாம்
புலிகள் பூனைகளாய்ப் பூங்காவில் உலாவுமாம்!










மூக்கில் முரலுவதாம் 'தாய்' மொழியதுவாம்
எண்திசை சுற்றாளிகள் எங்கும் தெரிவர்
சோறு போடுவதே சுற்றுலா வணிகந்தான்
ஊரை வளைத்து சுழித்தோடும் நதியாம்!

நதியின் முதுகில் நாவாய்க் கூட்டமாம்
முழுநிலவிற்குப் போட்டியாய் முற்றும் ஒளிருதாம்
கட்டடங்கள் கணக்கின்றி இருமருங்கும் இரவிலே
நதியின் ஓட்டமெதிர்த்து நாவாய் ஊறுதாம்!

ஈரக்காற்று மேனி தடவும் சுகானுபவம்
உற்சாகம் பீரிடுதாம் உல்லாசச் சுற்றாளிகட்கு
ஆறு அன்றோ ஊருக்கு அழகு
ஆகா, பாங்காக்கிற்கு அதி அழகே!
தாய்லாந்து திரிந்தபின் தன்னாடு ஒப்புமை
தவிர்க்க ஏலவில்லையே; தவிக்குதே மனந்தான்!
வெளிநாடு செல்வோர்க்கு வேண்டுதல் ஒன்றுண்டு
செல்லப் பேரப்பிள்ளைகளோடு சேர்ந்தே செல்லுங்கள் !

**சபா வடிவேலு , மதுரை.**

# உணவை வீணாக்காதீர்!



திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் சாப்பாடு போடும்போது அதை முழுவதும் சாப்பிடாமல் இலையில் வைத்து விட்டு வீணாக்குவதைப் பார்க்கும்போது நம் மனம் பதைபதைக்கிறது. அந்த உணவு நம் இலைக்கு வரும் முன்பாக அது வந்த பாதையை எண்ணிப் பார்த்தால் அதை வீணாக்கும் எண்ணம் வராது. ஒவ்வொரு அரிசியிலும் இன்னாருக்கு தான் என்று ஆண்டவன் முடிவு செய்வதாக சொல்வார்கள். ஆண்டவர் முடிவு செய்தாரோ இல்லையோ விவசாயின் உழைப்பு தான் அதை முடிவு செய்கிறது.





வயல் காட்டைச் சீர்செய்தல், ஏர் பிடித்தல், உழவு ஓட்டுதல், பரம்படித்தல்,விதை நெல் சேகரித்தல், விதை நேர்த்தி செய்தல் ,விதைகளை நீரில் ஊற வைத்தல், நாற்றங்காலில் விதைத்தல், நாற்றாக வளருதல், நாற்று எடுத்தல், முடிச்சு கட்டுதல், வயல் நிலத்தில் முடிச்சு வீசுதல், நடவு நடுதல், களையெடுத்தல், உரமிடுதல்,எலியிடம் தப்புதல், பூச்சியிடமிருந்து பாதுகாத்தல், நீர் தட்டுப்பாடு இன்றி வளருதல், கதிர் முற்றுதல்.

கதிர் அறுத்தல், கட்டு கட்டுதல், கட்டு சுமந்து வருதல், களத்துமேட்டில் சேர்த்தல்,கதிர் அடித்தல்,பயிர் தூற்றல்,பதறு பிரித்தல்,மூட்டை கட்டுதல், நெல் ஊறவைத்தல், நெல் அவித்தல், களத்தில் காயவைத்தல் மழையிலிருந்து பாதுகாத்தல்,நெல் குத்துதல்,நொய்யின்றிஅரிசியாக்குதல் இப்படி விவசாயியின் உழைப்பில்உருவான அரிசியை உலையில் இட்டு சாதமாக்கி இலையில் பரிமாறுவார்கள்.

இப்ப சொல்லுங்க சாதத்தை இனி வீணாக்குவிங்களா?

# மன அழுத்தம் நீங்கிட!



உலகத்தில் நிலவுகின்ற சூழல் ஒவ்வொரு மனிதனையும் ஏதோ ஒரு விதத்தில் அவனை மன அழுத்தத்துக்குள் ஆளாகிறது.

இந்த விஷயத்தை எப்படிச் சமாளிக்கப்போறேன்னு தெரியலையே?' என்கிற நினைப்புதான் மன அழுத்தத்தின் ஆரம்பம். ஒரு குழப்பமான மனநிலையில் இருந்து மீள்வதற்குள், அடுத்தடுத்த பிரச்னைகள் வந்து சுமையாக இறங்கும்போது, 'ஸ்ட்ரெஸ்' என்கிற மன அழுத்தத்துக்கு ஆளாக நேரிடுகிறது. இப்படி, தொடர்ந்து மன அழுத்தம் நேரும்போது, உடல் சார்ந்த பல்வேறு நோய்கள் நம்மை வாட்டி எடுக்கத் தொடங்கிவிடும்.

வேலைக்காக... குடும்பத்தையோ, குடும்பத்துக்காக... வேலையையோ விட்டுக்கொடுக்கவும் முடியாமல், பிரச்னைகளை எதிர்கொள்ளவும் தெரியாமல் மனதைக் குழப்பிக்கொள்பவர்களே இன்று அதிகம். இந்த ரீதியில் பார்த்தால், மன அழுத்தம் இல்லாத மனிதர்களே இல்லை. பள்ளி செல்லும் குழந்தைகளிடம்கூட மன அழுத்தம் புகுந்துவிட்டது என்பதுதான் வேதனை.

மன அழுத்தம் ஏற்படும்போது அது உங்கள் நரம்பு மண்டலம், மூளை, இதயம், ரத்த ஓட்டம், சிறுநீரகம், இனப்பெருக்க மண்டலம் என பல்வேறு உறுப்புகளைப் பாதிக்கிறது.

மன அழுத்தம் அதிகரிக்கும்போது மூச்சை அதிக அளவில் உள் இழுத்து வெளியேவிடச் செய்யும். இது சிலருக்கு படபடப்பு, மாரடைப்பை ஏற்படுத்தலாம்.

திடீரென ஏற்படும் மன அழுத்தமானது இதயத்துடிப்பை அதிகரிக்கிறது. இதனால் ரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. அதிக அளவில் ரத்தம் பம்ப் செய்யப்படும்போது ரத்தக் குழாய்கள், இதய தசைகள் அதிக அளவில் வேலை செய்கின்றன. தொடர்ந்து இப்படி நடக்கும்போது, ரத்தக்குழாய்களில் வீக்கம் ஏற்படும், மாரடைப்புக்கு வழிவகுக்கும்.



சிறிது நேரம் ஒதுக்கி தியானம் செய்வது உங்கள் மன அழுத்தத்தை குறைக்கும். அதற்காக பயிற்சி வகுப்புகளுக்குத்தான் செல்ல வேண்டுமென அவசியமில்லை. உங்கள் வீட்டிலேயே அமைதியான இடத்தில் அமர்ந்து கண்களை மூடி நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என மனப்பூர்வமாக உணர்ந்து சொல்லுங்கள். இது உங்களின் அன்றைய நாளின் போக்கையே மாற்றிவிடும். நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோமா இல்லையா என நம்முடைய எண்ணங்கள்தான் முடிவு செய்யும்.

மன அழுத்தம் அதிகரிக்கும் போது சோர்வடையாமல் சிறிது நேரம் வெளியே செல்லுங்கள். நொடிக்கு நொடி மாறும் காட்சிகளும், சுத்தமான காற்றும் உங்கள் மனநிலையை மாற்றி புத்துணர்ச்சியாய் உணரச்செய்யும்.

மன அழுத்தத்தை குறைக்க சிலர் சிரிப்பார்கள். ஆனால் உண்மையில் அது பலன் தரக்கூடிய ஒன்றுதான். சிரிக்கும்போது அது மன அழுத்தத்தை தரும் கார்டிசோல் எனும் ஹார்மோன் உற்பத்தியை குறைக்கிறது மேலும் நம் மனநிலையை மாற்றக்கூடிய எண்டோர்பின்ஸ் எனப்படும் மூளை இரசாயன உற்பத்தியை ஊக்குவிக்கிறது. எனவே முடிந்த வரை சிரிக்க முயலுங்கள். மன அழுத்தத்தை புன்னகையால் தோற்கடியுங்கள்.

ஒரு மனிதன் நிம்மதியாக வாழ எப்படி பணம் தேவைப்படுகிறதோ, அதே போல மகிழ்ச்சியுடன் வாழ உடல் ஆரோக்கியமும், கவலை இன்றி இருப்பதற்கு கடன் தொந்தரவு இல்லாமலும் இருக்க வேண்டும். இவை இல்லாமல் இருந்தாலே பணவரவே குறைவாக இருந்தாலும் கூட நிம்மதியாக வாழ்ந்து விடலாம். இன்றைய காலகட்டத்தில் கடன் இல்லாத மனிதனும் வியாதி இல்லாத மனிதனும் இல்லை என்ற சொல்லலாம். இந்த இரண்டு பெரிய பிரச்சனைகளையும் சரி செய்ய சிவன் கோவிலுக்கு இந்த பொருள்களை தானமாக வழங்கினால் சரியாகும் என்று சொல்லப்படுகிறது. அது என்னவென்று இந்த ஆன்மீகம் குறித்த பதிவில் தெரிந்து கொள்வோம்.

சிவன் கோவில்களில் முக்கியமான வழிபாடாக திகழ்வது பிரதோஷ வழிபாடு தான். இந்த பிரதோஷ வழிபாடு என்பது நம்முடைய பாவங்கள் கரைந்து குடும்பத்தில் உள்ளவர்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ நாம் வேண்டிக் கொள்வது என்பதும் அனைவரும் அறிந்ததே. அந்தப் பிரதோஷ காலத்தில் நாம் வாங்கிக் கொடுக்கும் சில பொருட்களால் நம்முடைய குடும்பம் கடன், வியாதி, குழப்பம் இல்லாமல் நிம்மதியாக இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

"கடன் வியாதி தீர சிவன் கோவிலுக்கு வாங்கி தர வேண்டிய பொருள் இந்த வகையில் நாம் முதலில் வாங்கித் தர வேண்டியது விபூதி. நல்ல சுத்தமான பசுசாணத்தில் செய்துவிபூதியை சிவ ஆலயத்திற்கு வாங்கி கொடுத்தால் அவர்கள் அதை அர்ச்சனைக்கும் கோவிலுக்கு வருபவர்களுக்கும் கொடுக்க பயன்படுத்திக் கொள்வார்கள். சிவ ஆலயத்தில் சிவனுடைய முக்கியமான பிரசாதமே இந்த விபூதி தான். இதை நாம் தானமாக கொடுக்கும் பொழுது இந்த பிரச்சனைகள் தீரும்.

அடுத்து நம் வீட்டிற்கு அருகில் இருக்கும் அரச மரத்திலிருந்து விழும் குச்சிகளை சேகரித்து காய வைத்து அதை சிவாலயத்திற்கு தானமாக கொடுக்கலாம். இந்த குச்சிகளை அவர்கள் கோவிலில் யாகம் செய்யும் போது பயன்படுத்திக் கொள்வார்கள். இப்படி செய்வதன் மூலம் கடனானது பெருமளவு குறைந்து விடும். பெரும்பாலும் கடன் தீருவதற்கான வழிபாடு அரச மரத்தை சுற்றியே அதிகம் இருக்கிறது. அப்படியான அந்த மரத்தின் குச்சியை நாம் சிவாலயத்திற்கு தானமாக கொடுக்கும் பொழுது கடன் தொடர்பான அனைத்து பிரச்சினைகளும் விரைவில் நீங்க வழி பிறக்கும்."

"அடுத்து இதில் இன்னொரு முக்கியமான ஒரு செயலையும் நாம் செய்ய வேண்டும். அது சிவாலயத்தில் அரிசி மாவில் கோலம் போடுவது. வீட்டில் விசேஷ நாட்களில் நாம் அரிசி மாவில் கோலம் போடுவது வழக்கம். அதே போல் சிவாலயத்திலும் இது போன்ற விசேஷ நாட்களில் ஏதேனும் ஒரு மூலையில் உங்களால் முடிந்த அளவு சின்ன அரிசி மாவு கோலத்தை போட்டால் உங்களை தொடரும் அனைத்து பிரச்சனைகளும் தீர்ந்து விடும்.

சிவாலயத்திற்கு தானமாக கொடுக்க வேண்டிய இந்த பொருள்கள் அனைத்துமே விலை மலிவானது தான். இது அனைவராலும் செய்யக் கூடியது தான். விபூதி உங்களால் முடிந்த அளவு வாங்கி கொடுக்கலாம். அரச மரக் குச்சிகளை மட்டும் கொஞ்சம் சிரமப்பட்டு நாம் தேடி எடுக்க வேண்டும் அவ்வளவு தான்."

# சிவாலயம் செல்வோம்!

-சிவ.மனோகர்



# கண்ணதாசன் பாடல்களில் இலக்கிய நயம்!

'பெரிய இடத்துப் பெண்' படத்திற்கான பாடல் எழுதும் வேளை அது. இயற்கை எழில் கொஞ்சும் ஆற்றங்கரையில், இரு இளம் பெண்களோடு இணைந்து ஆடிப்பாடி வருகிறார் எம்ஜிஆர்.

இதுதான் காட்சியமைப்பு. தேனினும் இனியதிருவாசகத்தில்,மாணிக்கவாசகர் எழுதிய வரிகள், கண்ணதாசன் மனதுக்குள் வந்து ஆடின.

மாணிக்கவாசகர் மதுரை வீதியில் நடந்து போய்க் கொண்டு இருக்கிறார். அங்கங்கே பெண்கள் மர நிழல்களில், முற்றங்களில், ஊஞ்சல்களில், அமர்ந்த வாறும், நின்றவாறும் பாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

அங்கே சில மங்கையர் வண்ணக் கோலப் பொடி இடிக்கிறார்கள். அப்படி தாள லயத்தோடு உலக்கையை


இடிக்கும்போது அவர்கள் பாடும் பாடல் இது :

**"முத்தணி கொங்கைகள் ஆட ஆட**
**மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்**
**சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்**
**செங்கயற் கண்பனி ஆட ஆடப்**
**பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்**
**பிறவி பிறரொடும் ஆட ஆட**
**அத்தன் கருணை யொ டாட ஆட**
**ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே"**

இந்தப் பாடலை படத்தில் பயன்படுத்துகிறார் கவிஞர். பெரிய இடத்துப் பெண் படத்தில் எம்.ஜி.ஆர் நடிப்பில் வெளிவந்த இந்த பாடல் சிறப்பாக பேசப்பட்டது.

*கட்டோடு குழலாட ஆடஆட*
*கண்ணென்ற மீனாட ஆடஆட*
*கொத்தோடு நகையாட ஆடஆட*
*கொண்டாடும் மயிலே நீ ஆடு! (கட்டோடு)*

*பாவாடை காற்றோடு ஆடஆட*
*பருவங்கள் பந்தாட ஆடஆட*



*காலோடு கால்பின்னி ஆடஆட*
*கள்ளுண்ட வண்டாக நீ ஆடு! (கட்டோடு)*
*முதிராத நெல்லாட ஆடஆட*
*முளைக்காத சொல்லாட ஆடஆட*
*உதிராத மலராட ஆடஆட*
*சதிராடு தமிழே நீ ஆடு! (கட்டோடு)*

*தென்னை மரத் தோப்பாகத்*
*தேவாரப் பாட்டாகப்*
*புன்னை மரம் பூச்சொரிய*
*சின்னவளே நீ ஆடு!*

*கண்டாங்கி முன்னாட*
*கன்னி மனம் பின்னாட*
*கண்டு கண்டு நானாட*
*செண்டாக நீ ஆடு! (கட்டோடு)*

*பச்சரிசிப் பல்லாட*
*பம்பரத்து நாவாட*
*மச்சானின் மனமாட*
*வட்டமிட்டு நீ ஆடு!*
*வள்ளி மனம் நீராடத்*
*தில்லை மனம் போராட*
*ரெண்டு பக்கம் நானாட*
*சொந்தமே நீ ஆடு! (கட்டோடு*

கண்ணதாசன் பாடல்களில் இலக்கிய நயம்!

இந்தியாவின் eRupee என்பது, டிஜிட்டல் ரூபாய் அல்லது டிஜிட்டல் ஐஎன்ஆர் (INR) அல்லது Eகரன்ஸி ரூபாய் (e-currency rupee) என்று அழைக்கப்படுகிறது. இது இந்திய ரூபாயின் டோக்கனைஸ் செய்யப்பட்ட டிஜிட்டல் பதிப்பாகும். இது இந்திய ரிசர்வ் வங்கியால், மத்திய வங்கி டிஜிட்டல் நாணயமாக வெளியிடப்பட்டு பயன்பாட்டிற்கு தற்போது அறிமுகம் செய்யப்படவுள்ளது.

டிஜிட்டல் ரூபாய் அல்லது டிஜிட்டல் நாணயம் என்பது காகிதப் பணத்தின் டிஜிட்டல் வடிவமாகும். இரூபாய் மற்றும் ரொக்கப் பணத்தின் மதிப்பு இரண்டுமே சமமானது. உதாரணமாக, 1 டிஜிட்டல்

# டிஜிட்டல் ரூபாய்

ரூபாய் என்பது 1 ரூபாய் பணத்திற்கு சமம் ஆனது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பொருள், கிரிப்டோகரன்சியைப் போலன்றி, இரூபாயின் மதிப்பு எப்போதும் ஏற்ற இறக்கமாக இருக்காது என்பதே ஆகும். இந்தியாவின் eRupee என்பது இந்திய ரிசர்வ் வங்கியால் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயமாக (CBDC) பரிவர்த்தனைக்கு பயன்படுத்தப்படும் டிஜிட்டல் முறை பணமாகும். இந்திய ரிசர்வ் வங்கி (RBI) விரைவில் UPI QR குறியீடுகள் மூலம் eRupee பணம் செலுத்த அனுமதிக்கும் என்று தெரிவித்துள்ளது. இப்போது இந்த முறை வளர்ச்சியில் உள்ளது.

"eRupee வரிசையில், 1 ரூபாய், 2, 5, 10, 20, 50, 100, 200, 500, 2000 போன்ற பண மதிப்புகள் கிடைக்குமென்று கூறப்படுகிறது. தடையற்ற அனுபவத்திற்காக மக்கள் விரைவில் இனி UPI QR குறியீடுகள் மூலம் CBDC கட்டணங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு இந்த டிஜிட்டல் பணமுறையை பயன்படுத்தலாம் என்று கூறப்பட்டுள்ளது."

கடந்த வாரம் G20 நிகழ்வில், RBI பிரதிநிதிகள் UPI QR குறியீடுகள் மூலம் eRupee பணம் செலுத்துவது ஜூலை மாத இறுதியில் சாத்தியமாகும் என்று கூறியிருந்தது. இந்த செய்தியை தூர்தர்ஷன் தெரிவித்துள்ளது. UPI மூலம் CBDC பணம் செலுத்துவதற்கான அறிவிப்பு அடுத்த சில நாட்களில் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

CBDC -ஐ ஏற்கத் தேர்வு செய்யும் சில்லறை விற்பனையாளர்கள் தங்களின் தற்போதைய UPI QR குறியீடுகளைப் பயன்படுத்தி eRupee




பணத்தை பெறலாம் மற்றும் பயன்படுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் வெளியான தகவலின் படி, பாரத ஸ்டேட் வங்கி (State Bank Of India), பேங்க் ஆஃப் பரோடா (Bank of Baroda), ஐசிஐசிஐ வங்கி (ICICI Bank) போன்ற வங்கிகள் eRupee சேவையை ஆதரிக்கின்றன.

இதில் எச்டிஎப்சி (HDFC) வங்கி, கோடக் மஹிந்திரா வங்கி (Kotak Mahindra Bank) மற்றும் யெஸ் வங்கி (Yes Bank) ஆகியவை RBI உடன் நடந்து வரும் இந்த eRupee சோதனைகளில் பங்கேற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பல வணிகர்கள் தற்போது CBDC இன் eRupee ஐ சோதனை செய்ய RBI க்கு உதவுகின்றன. CBDC கள் கிரிப்டோகரன்சிகள் போல வேலை செய்கின்றன.

ஆனால் அவை நேரடியாக ஒழுங்குபடுத்தப்பட்டு ஒரு நாட்டின் மத்திய வங்கிகளால் வழங்கப்படுகின்றன என்பது இந்த இடத்தில் கவனிக்கத்தக்கது. டிசம்பர் 1, 2022 அன்று புது டெல்லி, பெங்களூரு, மும்பை மற்றும் புவனேஷ்வரில் eRupee க்கான சோதனைகள் தொடங்கப்பட்டன. RBI கவர்னர் சக்திகாந்த தாஸ், CBDCகள் இன்றைய உலகில் நாணயங்கள் பயன்படுத்தப்படும் விதத்தை அடிப்படையாக மாற்றும் என்று சமீபத்தில் கூறியிருந்தார்.

கிரிப்டோகரன்சி பயன்பாட்டின் உச்சக்கட்டத்தின் போது CBDCகளின் தேவை அதிகரித்ததாக கூறப்படுகிறது. ஏனெனில் நாடுகள் ஒழுங்குபடுத்தப்படாத பரிமாற்றங்களை முறியடிக்க முயன்றன. உத்தியோகபூர்வ CBDCகள் ரொக்கத்தைப் போலவே கட்டுப்படுத்தப்படுகின்றன, ஆனால் காகித நாணயத்தின் மீது குறைந்த சார்பு கொண்டவை என்று கூறப்பட்டுள்ளது. eRupee விரைவில் இந்தியாவில் களமிறக்கப்படும் என்று கூறப்படுகிறது. இனி மக்கள் அவர்களின் இவாலெட்டில் இரூப்பி (eRupee) பணத்தை பயன்படுத்தலாம்.



# புறம் பேசுதல் அறம் ஆகாது!

**பு**றங்கூறல், புறணி, வீண் பேச்சு, வம்பு அரட்டை, புரளி, வதந்தி, செல்லமாய் 'காஸிப்'... உடன் இல்லாத இன்னொருவரைப் பற்றி அங்கே கூடியிருப்பவர்கள் இட்டுக்கட்டிப் பேசுவது என்பது ஒரு காலத்தில் திண்ணையிலும் புழக்கடையிலும் புழங்கியவைதான்; இன்று சமூக வலைதளங்களின் புண்ணியத்தில் கொடிகட்டிப் பறக்கிறது.

இந்த புறங்கூறலை எப்படி எதிர்கொள்வது என்பதில் தான் கவனமாக இருக்க வேண்டும்.

எளிமையான உபாயம் புறம்பேச்சை, அதன் போக்கில் அப்படியே விட்டுவிடுவதுதான். உங்களைச் சுற்றியிருப்பவர்கள் மத்தியில், அது சுற்றிச் சுற்றி வந்தாலும், அதன் உண்மையான இலக்கு நீங்கள்தான். உதாசீனப்படுத்தினால் உருத்தெரியாமல் அழிந்துவிடும்.

மாறாக 'என்னைப் பற்றி இப்படியொரு அவதூறா...' என்று வெகுண்டு நீங்கள் கிளம்பும்போதுதான், அந்த வதந்தி உயிர்பெறும். மாறாக, உலா வரும் வதந்தி பற்றி கவலையில்லாததாய்க் காட்டிக்கொண்டு, அதேசமயம் அமைதியாய் அதை ஊன்றிக் கவனியுங்கள். இதை யார் கிளப்பி விட்டது, கிளப்பியவருக்கும், பரப்பியவருக்குமான ஆதாயம் என்ன... என்ற கேள்விகளுக்கான பதில்கள், உங்களுக்குப் பயன்படலாம். சில சமயம் வதந்தியின் பாதியில், நீங்கள் கவனிக்க மறந்த ஒரு உண்மையும் ஒளிந்திருக்கலாம். இவ்வகையில் அவர்கள் மெனக்கெட்டு உங்கள் வளர்ச்சிக்காக உழைத்திருக்கிறார்கள். மெச்சிக் கொள்ளுங்கள்.

மாறாக, உலா வரும் வம்பு உங்கள் இருப்பை, நடமாட்டத்தை, இயல்பைப் பாதிக்கும் அளவுக்குக் கடுமையான மன உளைச்சலைத் தருகிறதா, தாமதிக்காமல் உங்கள் சுயவிளக்கத்தை பகிரங்கமாகவும், தன்மையாகவும் வெளிப்படுத்துங்கள். எல்லோருக்கும் உள்ளது போல இது என்னுடைய வாழ்க்கை, என்னுடைய பிரச்சினை, இதைத் திடமாக எதிர்கொள்வேன் என்பதோடு முடித்துக்கொள்ளுங்கள். பதில் விஷமப் பரப்புரையோ, சவடாலோ வேண்டாம். இதை எதிர்பார்த்து இன்னுமொரு கும்பல் காத்திருக்கக் கூடும்.

இந்த வகையில் மற்றவர் ஒளித்து வைத்துப் பரப்பும் கிசுகிசு மீது நாமே வெளிச்சம் பாய்ச்சினால், அதன் மீதான சுவாரசியத்தைச் சுற்றியுள்ளவர்கள் இழப்பார்கள். அத்தோடு கிசுகிசு பிசுபிசுத்துவிடும். திருவள்ளுவர் இதனை அழகாக கூறி உள்ளார்.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்

அறங்கூற்றும் ஆக்கத் தரும்."

விளக்கம்:

கண்ட இடத்தில் ஒன்றும், காணாத இடத்தில் வேறொன்றுமாகப் புறங்கூறிப் பொய்மையாக நடந்து உயிர் வாழ்வதைவிடச் சாவது நன்று.



எஸ்.ஜானகி

# உறவுகளின் பிணைப்பே வாழ்க்கை!

வேலூரில் மூடியிருந்தஒரு நியாய விலைக்கடையின் வெளியே இருந்த பலகையில் "இன்று செயலரின் அனுமதியுடன் விடுமுறை எடுத்துள்ளேன். தங்களுக்கு ஏற்பட்ட அசவுகரியத்திற்கு மன்னிக்கவும்." என்று எழுதியிருந்தது.

கடைக்கு பொருட்கள் வாங்க வந்த அத்தனை பேரும் இந்த பலகையை வாசித்துவிட்டு 'சரி சரி அவரும் மனிதர் தானே. விடுப்பு எடுத்துள்ளார். நாளைக்கு வாங்கிக்கொள்ளலாம்' என்று பேசியபடி கலைந்தனர். இல்லையெனில் பெரும்பாலானோர் அவரை சபித்தபடி சென்றிருப்பர்.





'கறுப்பா இருப்பாங்களே அவங்களா' எனத்தான் பொதுப்படையாக அடையாளத்திற்கு கூறுகிறோம். என் நண்பர் ஒருவர்., 'அடர் நிறத்தில் அருமையா இருப்பாங்களே, அவங்களைத்தான் நான் சொல்கிறேன்' என்று அற்புதமாக அந்த மனிதரை அடையாளப்படுத்தினார். வார்த்தைகளின் ஜாலம் என்பது மனமாற்றம் என்னும் மாயாஜாலத்தை அள்ளிக்கொடுக்கும் பொக்கிஷம்.

சில கடைகளில்.,'கேமரா உங்களை கண்காணிக்கிறது. கவனமாக இருங்கள்' என்ற வாக்கியம் இருக்கும். இந்த வாக்கியத்தைவிட, 'கேமரா செயல்படுகிறது. புன்னகையுங்கள்' என்ற வாக்கியம் நம்மை பெரிதும் கவர்கிறதுதானே.

அலுவலகங்களில் 'அனுமதி இல்லை' என்ற வார்த்தை ஏற்படுத்தும் ஒருவித அச்சம், 'அனுமதியுடன் உள்ளே செல்லவும்' என்ற போது இறுக்கம் குறைகிறது அல்லவா?

உணர்வுகளுடன் பின்னிப்பிணைந்தது தான் நம் வாழ்க்கை. அந்த உணர்வுகள் காயப்படாதவாறு நாம் நல்வார்த்தைகள் எனும் பிரம்மாஸ்திரத்தை பிரயோகித்து எண்ணிய எண்ணங்களை ஈடேற்றிக் கொள்ளலாம்.

பலஆண்டுபகைகளை எத்தனையோ கடித வரிகள் தீர்த்து வைத்திருக்கிறது. நாம் உபயோகிக்கும் வார்த்தைகளுக்கு அவ்வளவு வலிமை உண்டு. 'மெக்டவுகல்' போன்ற உளவியல் அறிஞர்களும் இதை ஒத்துக்கொள்கின்றனர். விஸ்வரூபம் பிரச்சனையில் நடிகர் கமல் சொன்ன யார்மீதும் எனக்கு கோபம் இல்லை.வருத்தம் மட்டுமே கூட இந்த ரகம் தான். நாமும் நம் அன்றாட வாழ்வில் அற்புதமான அழகியல் சொற்களை அணிந்துரைத்தால் அளவிற்கரிய மாற்றங்கள் நம் வாழ்விலும் நிகழும்.

நன்றி வாழ்க வளமுடன் வாழ்க நலமுடன்..!

**– அ.தமிழ்மாறன்**

# அமெரிக்க மண்ணில் தமிழ் உணர்வு!

அமெரிக்கா மற்றும் கனடா நாட்டில் வாழும் தமிழர்கள் இணைந்து வருடந்தோறும் கொண்டாடும் பெட்னா திருவிழா இந்த ஆண்டு கலிபோர்னியாவில் உள்ள சாக்கிரமன்டோ என்ற நகரில் இனிதே நடந்தேறியது. சான் பிரான்சிஸ்கோ விமான தளத்தில் இருந்து சாக்கிரமன்டோ செல்லும் வழியில், வேலியமைத்த பண்ணைகளில் மாடுகள் சுதந்திரமாக மேய்வதை பார்க்க முடிந்தது. கம்பீரமாக வளர்ந்திருக்கும் பனைமரங்கள் (நொங்கு இல்லாத அமெரிக்க வகை) நம்மை நகர் முழுதும் வரவேற்கும். தமிழின் அத்துணை துறைகளும் இங்கே நிகழ்த்தி காட்டப்பட்டது.

இசை, பேச்சுபோட்டி, திருக்குறள் பாடல் வடிவில், சினிமா பாடல், பாட்டுக்கு பாட்டு, சூப்பர் சிங்கர்கள், சின்னக்குயில் சித்ரா, சந்தானத்தின் காமெடி நிகழ்சி, பட்டிமன்றம், சித்த மருத்துவம், கல்வெட்டு, அகழ்வாராய்ச்சி, இலங்கை தமிழர் பிரச்சனை, உலகளாவிய தமிழர் அரசியல், தமிழர் வியாபாரம், தமிழ் இருக்கை என மிகச்சிறப்பாக அத்தனை துறைகளும் விவாதிக்கப்பட்டு/ பாடப்பட்டு கொண்டாடப்பட்டது. இந்த திருவிழாவில் பிரபலங்களுடன் சேர்ந்து புகைப்படம் எடுப்பதில் நமக்கும் ஒரு மகிழ்ச்சிதான். திருக்குறளை பாடல் வடிவில் பொருளுடன் இசைகலந்து பாடிக்காட்டினர்.









அவர்களிடம், சித்தர்களின் ஆன்மீக மற்றும் மருத்துவ பாடல்களையும் இப்படி பாடுவீர்களா என்றேன். தொடர்புகொள்ளுங்கள், நாம் சிறப்பாக செய்யலாம் என்றார்கள். ஜேம்ஸ் வசந்தன் அவர்களின் யாதும் ஊரே யாவரும் கேளிர் பாடலுக்கு இசையுடன் நடனமும் கலந்து அனைவரும் கண்டு களித்தனர். குத்து விளக்கு ஏற்றும் நிகழ்வில், எண்ணெய் திரிக்கு பதிலாக, நம்ம ஊரு விளையாட்டு LED லைட்டை ஒவ்வொருவரும் தனித்தனியாக இயக்கி வெங்கல குத்து விளக்கு பாத்திரத்தில் வைத்தனர். நமக்கு பாரம்பரியம் முக்கியமுங்க..... தமிழ் பாரம்பரிய உணவுகளுடன் இனிதே விழா முடிந்தது.

**– அருள் அமுதன்,**
*அமெரிக்கா*

# வழக்கங்கள் மாறலாம்!

**80** வயது முடிந்தது அந்த தம்பதியருக்கு சதாபிஷேகம். வெகு விமரிசையாக. சுற்றமும் நட்பும் அந்த தம்பதியருக்கு புடவை வேஷ்டி என்று எடுத்து சபையில் அவர்களுக்கு கொடுத்து ஆசீர்வாதம் பெற்று சென்றனர்.

தடபுடலாக நடந்து முடிந்தது.

மறுநாள் காலையில் அந்த பெரியவர் அருகில் உள்ள கோவிலுக்கு வந்து இறைவனை வழிபட்டு எதிரில் உள்ள அரச மரத்தினடியில் அமர்ந்தார்.

அப்போது அங்கு வந்த ஒரு இளம் தம்பதியினர் அவரிடம் அய்யா நாங்கள் புதிதாக திருமணம் ஆனவர்கள் கோவிலுக்கு வந்தோம். நடை சாத்தியிருக்கிறது.

எங்களுக்கு காத்திருக்க நேரம் இல்லை.

உங்களை பார்த்தவுடன் உங்களிடம் ஆசி வாங்கலாம் என்று வந்தோம். எங்களை ஆசீர்வதிப்பீர்களா என்று கேட்டவுடன் அவருக்கு மிகவும் மகிழ்ச்சி அடைந்தவராக காலில் விழுந்த தம்பதியரை வாழ்த்திட்டு தான் கொண்டுவந்த துணிப்பையில் கையை விட்டு ஒரு 10 ரூபாய் நோட்டை எடுத்து அவர்களிடம் கொடுத்து தம்பி என் காலில் விழுந்து வணங்கிய உங்களுக்கு கொடுப்பதற்கு என்னிடம் இதை தவிர வேறு எதுவும் இல்லை.

ஆகையால் இதை முழு மனதோடு கொடுக்கிறேன் பெற்றுக்கொள்வீர்களா என்று கேட்டு அந்த 10 ரூபாயை நீட்டினார்.

அவர்களும் அதை பெற்றுக்கொண்டு மிக மகிழ்ச்சியோடு சொன்னது அய்யா கோவிலில் சாமியை வழிபட்ட திருப்தி எங்களுக்கு கிடைத்திருக்கிறது.






அந்த சாமியே ஆசீர்வதித்ததை போல் உணர்ந்தோம் என்று சொல்லி, அவர்கள் கொண்டுவந்த பையினுள்ளிருந்து ஒரு கவரை எடுத்து அந்த கவரை பெரியவரிடம் நீட்டி "அய்யா நாங்கள் கோவிலுக்குள் சென்றபோது நடையடைக்கப் பட்டிருந்தது கண்டு சற்று வருத்தமாக இருந்தது.

அரை மணி நேரம் ஆகும் என்று சொன்னார்கள்.

நாங்கள் எங்கள் அவசரத்தை சொல்லவே உடனே அங்கிருந்த ஒருவர் உங்களை காட்டி அவருக்கு நேற்று தான் 80 கல்யாணம் அமோகமாக நடந்திருக்கிறது.



அவரிடம் சென்று வாழ்த்து பெற்று செல்லுங்கள் என்றார்.

சாமியே சொன்ன மாதிரி இருந்தது என்று சொல்லி இந்த கவரை உங்களின் 80 கல்யாணத்திற்கு எங்களின் அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூற அந்த பெரியவரும் ஏற்றுக்கொண்டார்.

அந்த தம்பதியரும் விடை பெற்று கொண்டு சென்றனர். அவர்கள் சென்றபின் அந்த பெரியவர் அந்த கவரை பிரித்தார் 50 ரூபாய் புது நோட்டு கட்டு ஒன்று பிரிக்கப்படாமல் இருந்தது.

அதை பார்த்ததும் அவர் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

அதோடு முதல் நாள் மாலை நடந்தது அவர் கண்முன் வந்தது. சதாபிஷேகம் முடிந்த கையோடு வந்திருந்த அனைவரும் சென்றுவிட்டனர். அமெரிக்காவில் இருந்து வந்த பையன் மருமகள் பேரக்குழந்தைகள் இருவரும் மறுநாள் அதிகாலை புறப்பட தயாராகி கொண்டிருந்தனர்.

அப்போது அந்த பெரியவரின் நீண்ட நாளைய நண்பர் ஒருவர் வந்து பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது அவரின் முகத்தில் படர்ந்த கவலையை பார்த்தவர் ஏம்பா நல்ல ஜம்முன்னு உன்னோட சதாபிஷேகம் முடிஞ்சது ஆனா நீ ரொம்ப கவலையா இருக்கிற மாதிரி தெரியுது என்ற உடன் அவர்களில் நீர் வழிந்தது.

பின் அவர் சொன்னார் ஜோரா நடந்தது எல்லோரும் வந்து நிறைய புடவை வேஷ்டி பூ பழங்கள் ஸ்வீட் உலர் பழங்கள் என்று கொண்டுவந்து கொடுத்தார்கள். ஒரு சிலர் ஏதோ கவர்கள் கொடுத்தார்கள்.

ஆனால் நாளை ஊர் திரும்பும் என் பேர குழந்தைகளுக்கு கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லை. வந்திருந்த ஒரு சில கவர்களில் இருந்த 600 ரூபாயை நம் வீட்டில் வேலை செய்யும் பேசியம்மா வுக்கு 300 ரூபாயும் கோவில் உண்டியலில் வேண்டிக்கொண்ட படி 300 ரூபாயும் கொடுத்து விட்டேன். வங்கியில் உள்ள பணத்தை எடுக்காமல் இருந்தால் தான் இந்த மாத மருந்துக்கு உண்டான பணத்தை ஆன்லைனில் கட்டி மருந்தை வீட்டிற்கு வரவழைத்து கொள்ள முடியும். பையனிடம் கேட்பதற்கு மிகவும் கூச்சமாக உள்ளது. வீட்டு வாடகை சாப்பாடு மருந்து செலவு என்று பையன் தான் பணம் அனுப்புகிறான். அதில் பெரிதாக ஒன்றும் மீதம் பிடிக்க முடியவில்லை. அப்பிடி சேமிக்கும் பணமும் ஒரு சில கல்யாணங்களுக்காகவும் மளிகை சாமான்கள் காய்கறி என்று செலவாகி விடுகிறது. இந்த நிலையில் இதுபோன்ற function களில் வரும் எல்லோரும் புடவை வேஷ்டி என்று எடுத்து கொடுத்தால்



அவ்வளவு புதுசு உள்ளே அடுக்கி வைத்திருக்கிறார்கள் எங்களுக்கு அதை கட்டிக்கொள்ள ஆயுசு பத்தாது. வருபவர்கள் இதை யோசிச்சு இனிமே இது போன்ற சந்தர்ப்பங்களில் அவர்களால் முடிந்ததை பணமாக அந்த தம்பதிகளிடம் கொடுத்தால் இது போன்ற பேரன் பேத்திகளுக்கு கொடுக்கவும் என் மனைவி காய்கறி பூ என்று வாசலில் வரும் வியாபாரிகளிடம் வாங்க கைசெலவிற்கும் எனக்கு கோவில் உண்டியலில் என்னால் முடிந்ததை



போடவும் அப்படியே கோவில் வாசலில் அமர்ந்திருக்கும் பிச்சைக்காரர்களுக்கு என்றாவது ஒரு சில நாள் காசு போடவும் தெரு முனை தள்ளு வண்டி கடைகளில் என்றாவது வாய்க்கு ருசியாக ஏதாவது வாங்கி சாப்பிடவும் உதவியாகவும் யார் கையையும் எதிர்பார்க்காமல் இருக்கலாம். ஆனால் இதையெல்லாம் செய்யுங்கள் என்று நாம் எப்படி சொல்வது. பையனிடம் இதற்கு மேல் கேட்பதற்கும் சங்கடமாக உள்ளது என்று கூறி முடித்தார். வந்த நண்பர் அவர் சொன்னதை கேட்டு வருத்தத்தோடு சென்றார். செல்லும்போது அவர் அந்த பெரியவரிடம் இனி இது போன்ற விழாக்களில் நானும் இதுபோல் செய்கிறேன். சஷ்டியப்தபூர்த்தி சதாபிஷேகம் போன்ற எல்லா விழாக்களுக்கும் தம்பதிகள் கையில் பணமாக கொடுப்பதை வழக்கமாக்கி கொள்கிறேன். இது இதுவரையில் எனக்கு தோணவில்லை என்று கூறி சென்றார்.

இப்போது கோவில் வாசலில் அமர்ந்த அந்த பெரியவர் நிமிர்ந்து பார்த்தார். நடை திறந்து தீபாராதனை நடந்துகொண்டிருந்தது. அந்த பெரியவர் அந்த புதுமண தம்பதியர் போன திசையையும் ஆண்டவன் சன்னிதானத்தில் தெரிந்த கற்பூர ஜோதியையும் மாறி மாறி பார்த்தார். அவர் கண்களில் ஆனந்த கண்ணீர் இரண்டாவது முறையாக.

இது எனக்கு கிடைத்த ஒரு பாடம். இனி எந்த சஷ்டியப்தபூர்த்தி சதாபிஷேகத்திற்கு போனாலும் அந்த தம்பதிகள் கையில் பணமாகவே கொடுக்கவேண்டும், சம்பிரதாயங்களை கடந்து, அவர்கள் மனம் குளிர செய்வோம் என்ற உறுதி மனதில் ஏற்பட்டது. கடந்த பத்து நாட்களுக்கு முன் பெங்களூரில் எனது உறவினர் ஒருவருக்கு 80க்கு நான் இதைத்தான் செய்தேன்.

எனது மனவி சம்பிரதாய வழக்கத்தை மீறி நீங்களே (ஜோதிடரே) செய்யலாமா? என்று கேட்டா .நான் சொன்னேன் அவர்கள் இருவருக்கும் பென்ஷன் இல்லை, எல்லோரும் புடவை வேஷ்டி கொடுத்தால் அவர்கள் என்ன செய்வார்கள். விற்கவா முடியும் என்றேன்.

பணமாக கொடுத்தேன் என்ற ஆத்ம திருப்தியோடு அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றோம். Customs and Usage makes law என்று சட்டம் பயின்ற போது படித்த ஞாபகம். வழக்கங்கள் தேவைக்கு சில சமயங்களில் புறம்பாக இருந்தால் மாற்றம் செய்வதில் தவறு இல்லை.கரி அடுப்பிலிருந்து காஸ்க்கு மாறுவது தவறு இல்லையே !!

படித்ததில் மிகவும் பிடித்தது !! அருமை, அருமையான ஆலோசனை. இந்த மாற்றம் தேவை.

**– எம்.எஸ்.எம்**

# நியாயத்துக்கு நன்மை உறுதி!



ஆற்றில் ஓடுகின்ற நீரானது தடைகளை கண்டு நின்றுவிடாமல் வளைந்து, ஒதுங்கி ஓடுவதுபோல, நாமும் வெற்றியை நோக்கி செல்ல வேண்டும்.

நேற்றைய கவலைகளை ஒதுக்கிவிட்டு, இன்றைய தினத்தை எப்படி பயனுடையதாக்குவது என்று சிந்திப்பவன் வாழ்வில் வெற்றி பெறுகிறான்.

பின்விளைவுகளை பற்றி எண்ணி தயங்கிக் கொண்டு இருக்காமல், முயற்சியுடனும், முழு ஆர்வத்துடனும் செயல்படுபவர்களை வெற்றி தேடிச் செல்கிறது.

எல்லாவற்றையும் சிறப்பாக செய்வதும், எதற்கும், எப்பொழுதும் தயாராக இருப்பதும் வெற்றியின் ரகசியம் ஆகும். சரியாக திட்டமிட்டு, சுறுசுறுப்போடும், சிறப்பாகவும் செயல்படுபவர்களே பெரும் வெற்றியை அடைகிறார்கள்.

மனம் தளராமல் நம்பிக்கையோடு உழைப்பவர்கள் நிச்சயமாக தங்களது குறிக்கோளை அடைய முடியும்.

எந்த ஒரு சாதனையும் செய்யாமல் வாழ்க்கை முழுவதும் வாழ்வதைவிட, புகழ் சூழ்ந்த ஒரு மணி நேர வாழ்வு கூட மேன்மையானதாகும்.

நமது லட்சியம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும், தன்னம்பிக்கையோடு செயல்பட்டால் நிச்சயம் நிறைவேறும். வெற்றியின் உச்சிக்கு செல்ல விரும்பினால், உங்கள் பணியை கீழ் மட்டத்தில் இருந்தே சிறப்பாக செய்யுங்கள்.

தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அவனே வாழத் தகுதியுள்ளவன்.* நம்மை நாமே வெறுக்காமல் இருப்பது முதற்கடமை. முன்னேற்றமடைவதற்கு முதலில் சுயநம்பிக்கை அவசியம்.* உலக நன்மைக்காக அவசியமாயின் உங்களிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்யுங்கள், தூய்மை உடையவன் தான், நல்ல சிந்தனையாளனாக, பகுத்தரவாளனாக, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக ஆகிறான்.

உங்களை ஓர் ஏழை என்று எப்போதும் நினைக்காதீர்கள், பணம் சக்தியல்ல, பணம் ஒன்றே வாழ்வின் இலட்சியம் என்றால் அது தவறான வழியிலேதான் தேடப்படும்.

பணத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக ஒழுக்கத்தை விற்று விடாதே.

பணத்தை வைத்திருப்பவனுக்குப் பயம். அது இல்லாத வனுக்குக் கவலை சிலர் பணத்தை வெறுப்பதாகக் கூறுவர். ஆனால், அவர் வெறுப்பது பிறரிடமுள்ள பணத்தை..

பணக்காரன் ஆக வேண்டுமா? அதற்குப் பணத்தைக் குவிக்க வேண்டியது இல்லை. தேவைகளைக் குறைத்துக் கொள். நியாயத்திற்கு நன்மை உறுதி.

வேலை செய்யாமல் பிறரிடம் பணம் பெறுவது பிச்சை எடுப்பதற்கு சமம். எவ்விதமான வேலையும் இல்லாமல் இருப்பவனைப் பார்ப்பது கூட, நமக்குத் தீமையை உண்டாக்கும். உழைப்புக்கு என்றும் மரியாதை உண்டு.* வாய்ப்பு ஒரு முறைதான் வரும், இனி வாய்ப்பைத் தேடி நாம் தான் செல்ல வேண்டும்.* பகைவரையும் நண்பனாக கருது, பண்பாளன் தான் உலகை வய்ப்படுத்த முடியும்.

ஆசைகள் வளர வளர அவனுடய தேவைகள் வளர்ந்து கொண்டே போகும்.

எவ்வளவு குறைவாகப் பேச முடியுமோ அவ்வளவு குறைவாகப் பேசு. மரண பயம் வாழ்நாளைக் குறைத்து விடும். கோபத்தில் வெளிவரும் வார்த்தைகள் அர்த்தமற்றவை.

அதிகம் வீணாகிய நாட்களில் நாம் சிரிக்காத நாட்கள் தான் அதிகம். முடிந்ததை சிறப்பாக செய்தால் அது திறமை. முடியாததை சிறப்பாக செய்ய முயற்சித்தால் அது தன்னம்பிக்கை.

தோற்று விடுவோமோ என்ற பயத்தை வெல்வதுதான் உண்மையான வெற்றி!

## மித்ரா டாக்கீஸ்







தலைவர்கள் அல்லது சமூகப் பிரபலங்களின் வாழ்க்கை வரலாற்றை சினிமாவாக தயாரிப்பது வழக்கமான ஒன்றுதான். அந்த வகையில் இளையராஜாவின் வாழ்க்கை வரலாற்றை தயாரிக்க இருப்பதாக இந்தி திரைப்பட இயக்குனர் ஆர் பால்கி அறிவித்துள்ளார். இதில் இளையராஜாவாக நடிக்க தனுஷ் பொருத்தமானவராக இருப்பார் என்கிறார் பால்கி. அதைப்போலவே கர்நாடக முதலமைச்சர் சித்தராமய்யா வாழ்க்கை வரலாற்றை தயாரிக்க இருப்பதாகவும் லீடர் ராமையா என்ற தலைப்பில் வெளியாகும் இந்த படத்தை சத்யா ரத்தினம் இயக்குவதாகவும் சித்தராமையா வேடத்திற்கு விஜய் சேதுபதி பொருத்தமாக இருப்பார் என்றும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக சொல்லப்படுகிறது.

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவர் கார்த்தி. இவர் தற்போது ராஜு முருகன் இயக்கத்தில் உருவாகி வரும் ஜப்பான் திரைப்படத்தில் நடித்து வருகிறார். இப்படம் வருகிற செப்டம்பர் மாதம் திரையரங்கில் உருவாகவுள்ளது.

இதை தொடர்ந்து அடுத்ததாக நலன் குமாரசாமி இயக்கத்தில் உருவாகும் பெயரிடப்பபடாத படத்தில் கார்த்தி நடிக்கவுள்ளார்.

இப்படத்திற்கு பின் 96 படத்தை இயக்கிய இயக்குனர் பிரேம் குமார் இயக்கத்தில் உருவாகும் படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் முதற்கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.



ஜெயிலர் படம் வெளியாக உள்ள நிலையில் அதில் "காவாலா" பாடலுக்கு குத்தாட்டம் போட்ட தமன்னாவுக்கு ரசிகர்களிடையே ஏகப்பட்ட வரவேற்பு கூடி இருக்கிறது. தலைவர் படத்தில் நடித்ததற்காக ரஜினி ரசிகர்களும் காவாலா பாடலை எங்கு போனாலும் அந்த பகுதி மொழியில் நடனமாடும் தமன்னாவை கொண்டாடுகிறார்கள் ரசிகர்கள் இத்தனை படங்களில் நடித்தது போது இல்லாத வரவேற்பு ஒரு பாட்டில் நடித்தது தமன்னாவுக்கு கிடைத்த பெருமையாக ரசிகர்கள் கொண்டாடுகிறார்கள்.

கேடி படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை தமன்னா. அதன்பின்னர் வியாபாரி, அயன் உள்ளிட்ட பல படங்களில் நடித்து முன்னணி நடிகைகளில் ஒருவராக திகழ்ந்து வருகிறார். பாலிவுட்டிலும் அதிகமான படங்களில் நடித்து வரும் தமன்னா, வெப் சீரிசிலும் நடித்துள்ளார். இவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான லவ் ஸ்டோரிஸ் 2வில் மிகவும் நெருக்கமான காட்சிகளில் நடித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்த வெப் தொடரில் படுக்கை அறை காட்சிகளும் லிப் லாக் காட்சிகளிலும் விஜய் வர்மாவுடன நெருக்கமாக நடித்தார். தமன்னா விஜய் வர்மாவும் காதலித்து வருவதாகவும் விரைவில் இருவரும் திருமணம் செய்து கொள்ளவுள்ளதாகவும் தகவல்கள் பரவி வருகின்றன.



செத்தும் ஆயிரம் பொன்' என்ற படத்தை இயக்கிய ஆனந்த் ரவிச்சந்திரன் இயக்கி இருக்கும் புதிய படம் 'டியர்'. இதில் ஜிவி பிரகாஷும், ஐஸ்வர்யா ராஜேஷும் நடித்துள்ளனர். இவர்களுடன் நடிகை ரோஹிணி, தலைவாசல் விஜய், பிளாக்ஷீப் நந்தினி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஜெகதீஷ் சுந்தரமூர்த்தி ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த படத்திற்கு ஜி. வி. பிரகாஷ் இசை அமைத்துள்ளார்.



இந்தப் படத்தின் ஒரு பாடலை ராப் பாடகரான அறிவு எழுதி, பாடியும் இருக்கிறார். ஃபேமிலி என்டர்டெய்னராக உருவாகியுள்ள டியர் படத்தை வருண் திரிபுரனேனி, அபிஷேக் ராம் ஷெட்டி மற்றும் பிருத்விராஜ் ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர். முதன்முதலாக ஜிவி பிரகாஷும், ஐஸ்வர்யா ராஜேஷும் இணைந்து நடிப்பதால் டியர் படத்துக்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. சென்னை, இடுக்கி, குன்னூர் பகுதிகளில் என நடந்த படப்பிடிப்பு பணிகள் 35 நாட்களில் முடிந்துள்ளன

இந்த நிலையில் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்ததை படக்குழு கேக் வெட்டி கொண்டாடியுள்ளது. டியர் என்ற வடிவில் கேக் வெட்டிய படக்குழு குரூப் புகைப்படம் எடுத்தும் பகிர்ந்துள்ளனர். படத்தை விரைவில் திரையிட போஸ்ட் ப்ரொடெக்ஷன் பணிகளில் படக்குழு தீவிரம் காட்டி வருகிறது.

# DD Returns: Turning point to சந்தானம்



ஆர்.கே.என்டர்டெயின்மென்ட் ரமேஷ் குமார் தயாரிப்பில், பிரேம் ஆனந்த் இயக்கத்தில் சந்தானம் நடிக்கும் திரைப்படம் 'டிடி ரிட்டர்ன்ஸ்'.

சுரபி, மொட்டை ராஜேந்திரன், பெப்சி விஜயன், முனீஷ் காந்த், உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

ஆஃப்ரோ இசையமைக்க, தீபக் குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். படத்தொகுப்பை ஸ்ரீகாந்தும், கலை இயக்கத்தை மோகனும் கையாண்டுள்ளனர்.

நடிகர் சந்தானம், " 'தில்லுக்கு துட்டு' முதல் மற்றும் இரண்டாம் பாகங்கள் பெரும் வெற்றியைப் பெற்றன. நான் அடுத்து நான் நடித்த சில படங்கள் சந்தானம் படம் போல இல்லையே என்று சொன்னார்கள். இந்த 'டிடி ரிட்டர்ன்ஸ்' முழுக்க முழுக்க சந்தானம் படமாக இருக்கும். இதில் வரும் ஒவ்வொரு பேயும் ஒவ்வொரு மாதிரி இருக்கும், குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைவரும் பார்த்து ரசிப்பார்கள்" என்றார்.

ஒரு பிரச்சனையில் சிக்கிய தன் காதலியை (சுரபி) காப்பாற்றத் துடிக்கும் இவென்ட் மேனேஜர் சதீஷை(சந்தானம்) அறிமுகம் செய்து வைக்கிறார்கள். காதலியை காப்பாற்ற பெரிய தொகைக்கு ஏற்பாடு செய்கிறார் சதீஷ். ஆனால் அது பயங்கரமான தொழில் அதிபரிடம் இருந்து திருடப்பட்ட பணம் என்பது பின்னர் தெரிய வருகிறது.அதன் பிறகு நடக்கும் சம்பவத்தால் சதீஷூம், அவரின் குழுவும் பேய் பங்களாவுக்கு செல்கிறார்கள். அங்கு இருக்கும் பேய்களால் ஆபத்தான விளையாட்டை விளையாட கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். சதீஷூம், அவரின் காதலியும் ஆபத்தான விளையாட்டில் ஜெயிலித்து, பேய்களிடம் இருந்து தப்பிப்பார்களா என்பதே கதை.ஒவ்வொரு காட்சியும் அமர்க்களமாக இருக்கிறது.

குழந்தைகளுடன் வயிறு குலுங்க சிரிக்க இந்த வார இறுதிகான சிறப்பான படமாக இந்த படம் இருக்கும். படத்தின் முதல் 40 நிமிடங்கள் கதை நகர்வது எதை நோக்கி படம் செல்கிறது என்று ஒரு குழப்பமான நிலையில் இருக்கிறது.

அதன் பிறகு தான் படம் பிக்கப் ஆகிறது குறிப்பாக அந்த பங்களாவுக்கு சென்ற பிறகு அவர்கள் அடிக்கும் லூட்டி வயிறு வலிக்க சிரிப்பு தான். முதல் பாதிக்குள் கதை செல்லும் வரை கொஞ்சம் சுமார் என்று கூறலாம். இரண்டாம் பாதி. மிகவும் விறுவிறுப்பாக செல்வது படத்தின் வெற்றிக்கு காரணமாக அமைந்திருக்கிறது. படத்தை தன் தோள்களில் தாங்கியிருக்கிறார் சந்தானம்.

தன் ஒன்லைனர்களால் தியேட்டரில் இருப்பவர்களை சிரிக்க வைக்கிறார். சுரபி, ரெடின் கிங்ஸ்லி, பிரதீப் ராவத், முனீஷ்காந்த், மொட்ட ராஜேந்திரன் உள்ளிட்டோர் தங்கள் கதாபாத்திரத்தை புரிந்து நடித்திருக்கிறார்கள். அவர்களின் நடிப்பை குறை சொல்ல முடியாது. கதை நகர நகர மாசூம் ஷங்கரின் கதாபாத்திரம் முக்கியமானதாக மாறுகிறது. அவர் நன்றாக நடித்திருக்கிறார்.

தன்னுடன் நடிக்கும் சக நடிகர்களை அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக நடிக்க வைத்து நம்மை ரசிக்க வைத்திருக்கிறார் சந்தானம்.

# நீலப்பல்



கவின், கயல் இருவரும் அன்பான அண்ணன் தங்கை. அன்று சனிக்கிழமை. கயல் தன்னுடைய ஓவிய வகுப்பில் சொல்லித் தரப்பட்ட படங்களை I-Padல் வரைந்து பார்த்துக் கொண்டு இருந்தாள். அப்போது கவின் அங்கே வந்தான். நான் வலையொளியில் (YouTube) ஒரு காணொளியைத் (video) தேட வேண்டும். ஐந்து நிமிடங்களில் திருப்பித் தந்து விடுவேன். I-Padஐத் தருவாயா? என்று கேட்டான். அண்ணா, 'நான் வரைந்து கொண்டிருக்கிறேன். என்னால் இப்போது தர முடியாது' என்றாள் கயல். கயல், 'நீ ஒரு மணி நேரமாக I-Padஐ வைத்துக் கொண்டிருக்கிறாய். நான் ஐந்தே நிமிடங்களில் தந்துவிடுவேன் என்கிறேன். தரமாட்டேன் என்கிறாயே! நான் அம்மாவிடம் சொல்கிறேன் பார் 'என்று சொல்லிக்கொண்டு அலுவலக வேலை செய்து கொண்டிருந்த அம்மாவின் அறைக்குச் சென்றான்.

'அம்மா' என்று அவன் தொடங்கும் முன்பே 'கவின், இதோ நான் வேலையை முடித்துவிட்டேன். நீ என்னுடைய கணினியைப் பயன்படுத்தலாம்' என்று சொன்ன அம்மா 'நீ என்ன தேட வேண்டும்?' என்றார். ஒரு வரலாற்றுக் கதை படித்து வரவேண்டும் என்று என் ஆசிரியர் சொல்லி இருக்கிறார் அம்மா. அதைத் தான் தேட வேண்டும்' என்றான் கவின். 'வரலாற்றுக் கதை தானே! நான் சொல்கிறேன்' என்றார் அம்மா. 'அப்படியா? சரி அம்மா' என்றான் கவின்.

அம்மா கதை சொல்லத் தொடங்கினார். 'கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஹெரால்டு பிளாட்டன்ட் (Harald Blatant) என்பவர் இன்றைய டென்மார்க் நாட்டை ஆண்டு வந்தார். சிறு சிறு பகுதிகளாக இருந்த டென்மார்க்கை இணைத்து ஒரு முழு நாடாக ஆக்கியவர் அரசர் ஹெரால்டு (Harald) தான். அதன் பிறகு அவர் நார்வே நாட்டையும் தன் நாட்டோடு சேர்த்தார். அவர் இருபத்து எட்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவருக்குப் பிறகு அவருடைய மகன் அரசர் ஸ்வெயின் (Swain) சுவீடன் நாட்டையும் தன் நாட்டோடு சேர்த்தார். இவர்களை வைக்கிங் (Viking)அரசர்கள் என்று சொல்வார்கள். அரசர் ஹெரால்டு பிளாட்டண்ட்டின் (Harald Blatant) ஒரு பல் நீல நிறத்தில் இருந்தது. என்ன காரணம் என்று தெரியவில்லை. அதனால் எல்லோரும் அவரை ஹெரால்டு நீலப்பல் (Bluetooth) என்ற பட்டப்பெயபெயர் சொல்லி அழைத்தனர்' என்று அம்மா சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, 'அந்தக் கதை எனக்குத் தெரியும் அம்மா' என்றான் கவின் ஆர்வமாக. 'அப்படியானால் மீதிக் கதையை நீ சொல் பார்ப்போம்!' என்றார் அம்மா.

'இன்டெல் (Intel) நிறுவனத்தின் ஜிம் கார்டாக் அவர்கள் கம்பி இணைப்பு இல்லாத ஊடலை (Bluetooth) தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்த போது அதற்காக ஒரு நல்ல பெயரைத் தேடிக் கொண்டு இருந்தார். அப்போது அவருடன் வேலை செய்த சுவீடன் நாட்டுக்காரர் வைக்கிங் அரசர் ஹெரால்டு நீலப்பல்லைப் (Harald Bluetooth) பற்றிச் சொல்லி, அவரைப் பற்றிய ஒரு கல்வெட்டு இன்றும் டென்மார்க்கில் எல்லிங் என்ற ஊரில் இருப்பதாகச் சொன்னார். இந்தக் கதையைக் கேட்ட ஜிம் கார்டாக் (Jim Kardach), பல பகுதிகளை இணைத்து ஒரே நாடாக்கிய அரசர் ஹெரால்டின் (Harald) பட்டப்பெயரான Bluetooth என்ற பெயரையே இந்த புதிய ஊடலை தொழில்நுட்பத்திற்கு வைக்கலாம் என்று முடிவு செய்தார்' என்று கவின் தனக்குத் தெரிந்த கதையைச் சொன்னான்.

'நானும் பெரியவன் ஆனதும் ஆராய்ச்சி செய்து புதிதாக எதையாவது கண்டுபிடித்து அதற்கு நம் தமிழ் மன்னர் கரிகால் வளவனின் பட்டப்பெயரான 'கரிகால்' அதாவது Blackfoot என்ற பெயரை வைப்பேன். க ( ) , வ ( ), என்ற சங்ககாலத் தமிழில் எழுத்துகளை ஒன்றாய்ச் சேர்த்துக் குறியீடும் ( ) அமைப்பேன்' என்றான் கவின்.

அம்மா கவினைக் கட்டித் தழுவிக் கொண்டார். ஏ! எனக்குக் கதை கிடைத்து விட்டது என்று சொல்லிக் கொண்டே ஓடினான் கவின்.

– ஜெயா மாறன்

அட்லாண்டா, அமெரிக்கா

# தேனின் மருத்துவ குணங்கள்!



**தே**ன் உடலின் ஒவ்வோர் உறுப்புக்கும் ஊட்டத்தை அளிக்கக்கூடியது. அதனால்தான் தேனை அமிர்தத்துக்கு நிகராகச் சொல்கின்றனர்.

எந்தப் பூவில் இருந்து தேன் எடுக்கப்படுகிறதோ, அந்தப் பூவின் தன்மையைப் பொருத்து தேனின் தன்மையும் குணமும் மாறுபடும்.

நாவல், வேம்பு, முருங்கை, மா, தும்பை, பூர்க்கு, புளியம், துளசி, பூண்டு மற்றும் வெங்காரமது போன்ற 300க்கும் அதிகமான தேன் வகைகள் உள்ளன. பொதுவாக, தேனை நல்ல தூக்கம், தொண்டைக்கட்டு, உடல் எடை, மேனி அழகு, வயிற்றுப்புண், கொப்புளம் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தலாம். தேனை அனைத்து மருந்துகளுடனும் சேர்த்துப் பயன்படுத்தலாம். தேன் வயிறு சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்தும். பாலுடன் தேன் சேர்த்துச் சாப்பிட்டால், உடல் எடை அதிகரிக்கும், தூக்கம் அதிகரிக்கும். பால், பாசிப்பயறு மற்றும் தயிரைத் தேனுடன் சேர்த்து முகத்தில் பூசிவர முகப் பொலிவு கூடும்.



கிரீன் டீ உடன் தேன் சேர்த்துச் சாப்பிட்டால், தூக்கம் வருவதைத் தடுக்கலாம்.

தேனை, சுண்ணாம்புடன் சேர்த்துப் பத்து போட்டால், வலி, வீக்கங்கள் குறையும்.

தூதுவளைச் சாறு, தேன் சேர்த்துக் குடிக்க, சளியைக் குணப்படுத்தும். கேரட், தேன் சேர்த்துச் சாப்பிட்டால், ரத்தசோகைப் போகும். தேங்காய்ப்பாலுடன் தேன் சேர்த்துச் சாப்பிட்டால், குடல் புண், வாய்ப்புண்கள் ஆறும். பார்லி அரிசிக் கஞ்சியைத் தேனுடன் சேர்த்துச் சாப்பிட, அல்சர் குணமாகும்.

பூண்டு, தேனைச் சேர்த்துச் சாப்பிட்டால், தொண்டைப் புண் சரியாகும்.தேனை வெந்நீர் சேர்த்துக் குழந்தைகளுக்குக் கொடுத்தால், வயிற்றுப்போக்கு சரியாகும். துளசி, தும்பை மற்றும் தேனை சிறிது சிறிதாய் சேர்க்க, மூச்சுத் திணறல் குறையும்.

இரண்டு டீஸ்பூன் ஆமணக்கு எண்ணெய், ஒரு டீஸ்பூன் தேன் சேர்த்துச் சாப்பிட்டால், மூச்சுத் திணறல் உள்ளவர்களுக்கு பலன் தரும்.

தேன், மிளகுடன் சேர்ந்துச் சாப்பிட, தொண்டைக் கரகரப்பு நீங்கும்.

பழச்சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டால், நல்ல சக்தி உண்டாகும். பாலில் தேன் கலந்து இரவில் சாப்பிட, நல்ல தூக்கம் வரும். இதயம் பலம் பெறும்.

40 வயதைக் கடந்தவர்கள், நீர் அல்லது பாலுடன் தேன் சேர்த்துச் சாப்பிட்டால், கால்சியம் சத்தின் அளவு கூடும். தேனை, தீப்புண்களின் மீது தடவிவர புண்கள் ஆறும். நெல்லிக்காய் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால், இன்சுலின் சுரக்கும். எலுமிச்சைச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால், இருமல் குணமாகும். இஞ்சிச் சாற்றுடன் தேன் சேர்த்துச் சாப்பிட்டால், பித்தம் தீரும். மாதுளை மனப்பாகு ரு மூன்று மாத கர்ப்பிணிகள், மாதுளம் பழச்சாறு, தேன், பன்னீர் ரோஸ், கல்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால், வயிற்று எரிச்சல் குறைவதுடன், ஹீமோகுளோபின் அளவும் அதிகரிக்கும். மேலும், வாந்தி வருவது போன்ற உணர்வு குறையும்.

– ஜெ.பாஸ்கரன்

# வான் புகழ் வள்ளுவம்!

*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு.*

விளக்கம் : அற ஒழுக்கத்தில் சிறந்து நிலையாக நின்று, பற்று ஒழித்த துறந்தவர்களின் பெருமைகளைச் சிறப்பாகக் கூறுவதே நூல்களின் விழுமிய பயனாகக் கொள்ளல் வேண்டும்.



உலகத்தில உள்ள வாழ்க்கைப் போராட்டத்தைப் பொருட்படுத்தாத தெளிவும், துணிவும் உடையவர்களே அறநெறி பிறழாமல் வாழ முடியும். அவர்களால் மட்டுமே ஒழுக்கத்தைப் போற்றிக் கடைப்பிடிக்க முடியும். ஒழுக்கத்தில் நிலைத்து நிற்பது பற்றற்றவர்களின் கடமையாகும்.புலனடக்கம் உடையவர்களே பற்றுகளை துறந்து வாழ வல்லவர்கள். ஐம்புலன்களையும் அடக்கி , ஒடுக்கிக் காக்க வல்லவர்களே சிறப்புக்குரியவர்கள். அத்தகு துறவிகளின் பெருமைகளை அளவிட்டுக் கூறுதல் இயலாது. இம்மை , மறுமைகளை உணர்ந்து துறவறம் மேற்கொண்ட தூய துறவிகளின் பெருமை உயர்வுக்குரியதாகும். இக்குறளுக்கு ஏற்புடைய வேறு சில இலக்கியப் பதிவுகள்:

*எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு*
*பொல்லா புழுமலிநோய்ப் புன்குரம்பை நல்லார்*
*அறிந்திருப்பார் ஆதலினால் ஆங்கமல நீர்போற்*
*பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.*

– நல்வழி ஔவையார்.

உடம்பின் இழிவை அறிந்த மெய்ஞ்ஞானிகள் உடம்பொடு கூடி இருப்பினும் தாமரை இலை தண்ணீர் போல பற்றற்று ஒட்டாது இருப்பார்கள்.

செய்தவ மறந்தாற் கைதவ மாளும்.

– கொன்றை வேந்தன் ஔவையார்.

ஒருவன் செய்யும் தவத்தை மறந்தால் அவனை. அஞ் ஞானம் ஆட்கொள்ளும்.

*மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற*
*ஐவாய வேட்கை யவாவினைக் கைவாய்*
*கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்*
*விலங்காது வீடு பெறும்.*

– நாலடியார் சமண முனிவர்கள்.

உடம்பு, வாய், கண், மூக்கு, செவிகள் என்று பெயர்களைப் பெற்றுள்ள ஐம்பொறிகள் வழியான விருப்பங்களையும், ஆசைகளையும் தன்னிடம் உண்டாகாமல் காத்து, தவ ஒழுக்கத்தில் தன்னைச் செலுத்த வல்ல மன வன்மை உடையவர் உறுதியாக வீடுபேறு அடைவர்.

*மின்னேரி டையார் சொற்றேனான் விழைவோரான்*
*கொன்னே வெகுளான் கொலை புரியான்*
*உறுப்பறுத் தன்னகொடை யுவப்பான் தன்னின்*
*வெறுப்பறுத்தான் விண்ணகத்து மில்.*

– ஏலாதி கணிமேதையார்.

பெண்கள்மேல் சிறிதும் நுகர்ச்சியைக் கருதாதவர்கள், சினத்தை அடக்கியவர்கள், எந்த ஒரு உயிரையும் கொல்லாதவர்கள், தன் உடலுறுப்பையும் அறுத்துக் கொடுக்குமளவு கொடையுளமுடையவர்கள், மனதாலும் பிறரை வெறுக்காத ஒழுக்க சீலர்களே தேவர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள்.

*முப்பெயர் மூன்றும் உடன்கூட்டி ஓரிடத்து*
*தப்பிய பின்றைத்தம் பேரொழித்து அப்பால்*
*பெறுபெயரைக் காயப் பெறுபவேல் வையத்து*
*உறுமவனை எல்லா மொருங்கு .*

–அறநெறிச்சாரம் முனைப்பாடியார்.

தம் ஆணவமாகிய பெயரினை விலக்கி, துறவு நிலைக்குப் பின் கடவதாகிய தூயோன் என்ற புகழ்ச்சொல்லையும் வெறுக்கப் பெறுவார்களேயாயின், அவ்விதம் பெற்ற தூய துறந்தவர்களை எல்லா சித்திகளும் அடையும். ஒழுக்கத்திலும், பண்பு நலன்களிலும் நிறைந்து, ஐம்புலன்களையும் பொறிவழியில் செல்லாது காக்க வல்லவரே மேலுலகத்திற்கு சிறந்த வித்தாவர்.

*வெகுளி,அவா நீத்தார்*
*விருப்பு வெறுப்பு அற்றார்*
*ஒழுக்க நெறி நின்றார்*
*புலன் அடக்கம் கொண்டவரே*
*பற்றற்ற துறவி ஆவார்.*

அத்தகு தூய்மையான துறவிகளின் பெருமைகளைச் சிறப்பாகக் கூறுவதே நூல்களின் முடிவாகும்.

*நீத்தார் பெருமை*
*துறவோர் சிறப்பின்*
*தூய்மையை உரைப்பதே*
*விளக்காம் நூல்களின்*
*விழுமிய பயனாம்.!*

**– சு.அமுதமணி கல்யாணசுந்தரம்.**

**வி**யர்த்து விறு விறுத்து உள்ளே வந்தார் கபாலிகான்.

வண்டி ரிப்பேர் நடந்தே வந்தேன் என்றவரிடம், ஒ பாத யாத்திரையா?

இந்தாங்க தக்காளி சூப் என்றோம்.

**தக்காளி விக்கற விலையில எப்படிங்க** என்று கேட்டு வாங்கிக் கொண்டு சுவைத்தார் கபாலி கான்.

இந்த மாத இதழில் அகில இந்திய அளவில் அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலுக்கு தயாராகும் கட்டுரை படித்தேன் .தமிழ்நாட்டு செய்திகளை சொல்கிறேன் என்று ஆரம்பித்தார்.



"சொல்லுங்க" என்று காத்திருந்தோம்.

அகில இந்திய அளவில் எதிர்க்கட்சிகளோடு கூட்டணி வைத்திருப்பதால் தமிழகத்தை ஆளுகின்ற தி.மு.கவிற்கு பல்வேறு பகுதிகளில் இருந்து நெருக்கடி வர ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே ஆளுநர் கொடுத்து வந்த குடைச்சல் கொஞ்சம் குறைந்ததாக இருந்த நிலையில் அமலாக்கத் துறையின் நடவடிக்கைகள் கட்சியை அசைத்துப் பார்க்க ஆரம்பித்து விட்டன.

"நாங்கள் நெருக்கடி நிலையை பார்த்தவர்கள்"என்று எப்போதும் எதிர்ப்பு குரல் கொடுத்து வரும் திமுக சற்று சலனப்பட்டு போய் தான் இருக்கிறது என்பதை கவனிக்கத்தான் தோன்றுகிறது. பி.டி. பழனிவேல் தியாகராஜன், செந்தில் பாலாஜி, பொன்முடி என்று வரிசையாக டார்கெட் வைத்து ஆட்சியிலும் கட்சியிலும் வேகமாக இருந்த அவர்களின் செயல்பாடுகளை நீர்த்துப் போகச் செய்தது கட்சிக்காரர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. சட்டரீதியாக எதையும் சந்திப்போம் என்று சொன்னாலும் அதை வெளிப்படையாக வெளியே சொல்ல முடியாமல் இருப்பது திமுகவினர் களிடையே தயக்கம் இருப்பது தெரிய வருகிறது.


இருப்பினும் ஒரு ஐந்து மாத காலம் எப்படியாவது கடந்து போய்விட வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறது தி.மு.க.

எனவே நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மக்களிடத்திலும் அதை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கட்சிக்காரர்கள் இடத்திலும் ஆதரவையும் நெருக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ள ஆட்சி ரீதியாகவும் கட்சி ரீதியாகவும் தி.மு.க தன்னை தயார் படுத்திக் கொண்டிருக்கிறது.

**எப்பவுமே திமுகவை பத்தி தான் சொல்றீங்களே தவிர மத்த கட்சிகளை பத்தி பேசமாட்டேங்கிறீங்களே?**

என்ன இப்படி சொல்றீங்க நாம எப்பவுமே எல்லா விஷயங்களை பேசி தானே தீருவோம்!

அ.தி.மு.கவை பொறுத்த வரையில் பிரதமர் பக்கத்தில் நிற்கிற இடத்தில் எடப்பாடி தன்னை நிறுத்திக் கொண்டு விட்டார். தேர்தல் ஆணையம், நீதிமன்றங்கள் மூலம் தன்னை வலுவானவராக காட்டிக் கொண்ட எடப்பாடி பழனிச்சாமி பிரதமர் பக்கத்தில் நிற்பதன் மூலம் அதிமுக என்றால் எடப்பாடி தான் எடப்பாடி என்றால் அதிமுக தான் என்று சொல்லுகின்ற நிலை உருவாக்கி விட்டார். அதே உற்சாகத்தில் மதுரை மாநாட்டை இந்தியாவை திரும்பிப் பார்க்கின்ற வகையில் நடத்துவது என்று





முடிவெடுத்து விட்டார் .எனவே அவர் தன்னுடைய பயணத்தை வேகமாக செலுத்திக் கொண்டிருக்கிறார். ஆனால் ஒரு சிக்கல்!

**என்ன ஆச்சு!**

அண்ணாமலை பாதயாத்திரை போவதால் அவருக்கு தரப்படும் வரவேற்புகள் அ.தி.மு.கவிற்கு பாதகமாக அமைந்து விடுமோ என்ற ஒரு பேச்சு எழுகிறது!

**எதுக்கு எதை முடிச்சு போடுறீங்க?**

கேளுங்க.. பாதயாத்திரை துவக்க விழா நடந்தது இல்லையா?

**ஆமா?**

**அதுக்கு எடப்பாடி போகலையே?**

அவர் போகவில்லை என்றால் என்ன அவருக்கு பதிலாக உதயகுமார் போய் அவரே போயிருந்தாலும் அப்படி பேசி இருக்க முடியுமா என்று சொல்லுகின்ற விதத்தில் உதயகுமார் பேசியதை எல்லோரும் வியப்பாக பார்த்தார்களே?

எல்லோரும் வியப்பாக பார்த்த போது அண்ணாமலை பார்த்ததை கவனித்தீரா?

**ஓஹோ?**

அதனால்தான் தனது நடை பயணத்தின் போது ஓ.பி.எஸ் .பற்றி குறிப்பிட்டு அண்ணாமலை பேசியிருக்கிறார்!

ஏற்கனவே ஓபிஎஸ் தினகரன் இணைந்து ஆகஸ்ட் 1ஆம் தேதி நடத்திய கோடநாடு கொலை கொள்ளை வழக்கு விசாரணையை துரிதப்படுத்த வேண்டும் என்ற ஆர்ப்பாட்டத்திற்கு திரண்டு வந்த கூட்டத்தை பார்த்தவுடன் அண்ணாமலை தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு அப்படி சொன்னார் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள். பாதயாத்திரை முடியும் நேரம் அரசியல் மாற்றம் ஏற்படும் என்று சொன்னார்கள் அந்த அரசியல் மாற்றம் பா.ஜ.க அ.தி.மு.க கூட்டணி மாற்றமாக கூட இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

**கூட்டணி பலமாகத் தானே இருக்கிறது?**

ஆனால் பாஜகவை ஆதரிக்கும் வலதுசாரிகள் என்ற போர்வையில் உள்ள அரசியல் விமர்சனங்கள் தொலைக்காட்சியில் வைக்கின்ற வாதங்கள் கூட்டணி தொடர வாய்ப்பில்லை என்றே தெரிகிறது. முடிந்தால் நான்கு நாளைக்கு மாலை வேலைகளில் தொலைக்காட்சியை வைத்து அதில் வருகின்ற விவாதங்களை பாருங்கள் என்று சொல்லிவிட்டு வெளியேறினார் கபாலிக்கான்.



# வாழ்நாள் முழுவதும் வாசிப்பை நேசித்தவர் பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர்!

எந்த ஒரு நூலும் சமகால பிரச்சினைக்கு பதில் சொல்வதோடு நின்று விட்டால் அது எதிர்காலத்தில் இறந்தகால நூலாகிவிடும். டாக்டர் அம்பேத்கரின் நூல்கள் எல்லா காலத்திற்கும் வேண்டப்படுபவை.

இந்தியாவின் முன்னாள் பிரதமராக இருந்த டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், எனக்கு பொருளாதாரத்தில் ஏதாவது சிக்கல் இருந்தால் உடனே டாக்டர் அம்பேத்கர் எழுதிய நூல்களைப் படித்துத் தெளிவு பெறுவேன் என்று கூறியுள்ளார். அதேபோன்று முன்னாள் நிதி அமைச்சராகவும், உள்துறை அமைச்சராகவும் இருந்த ப. சிதம்பரம் அவர்கள், எனக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால்ஞ் டாக்டர் அம்பேத்கர் எழுதிய நூல்களைப் படித்து அறிந்து கொள்வேன் என்று கூறியுள்ளார். மேலும் விஐடி வேந்தர் விஸ்வநாதன் அவர்கள் டாக்டர் அம்பேத்கரின் 125வது பிறந்த நாள் விழா மேடை ஒன்றில், எனக்கு ஏற்படும் சந்தேகங்களை தீர்த்து வைப்பவர் டாக்டர் அம்பேத்கர் தான். அவர் எழுதிய நூல்களில் இருந்து நான் தெளிவு பெறுவேன் என்று கூறியுள்ளார். இதுபோன்று இவ்வுலகில் ஆயிரமாயிரம் சான்றோர் பெருமக்களும், ஆய்வாளர்களும் டாக்டர் அம்பேத்கரின் நூல்களைப் படித்த வண்ணம் இருக்கின்றனர். அவர் எந்த அளவிற்கு இச்சமூகத்திற்கும், நாட்டுக்கும் தேவையானவற்றை பதிவு செய்துள்ளார் என்பதை ஆராய வேண்டும்.



டாக்டர் அம்பேத்கர் எழுதிய ஒவ்வொரு சொல்லும் பொருள் குறித்தவை. இன்னும் சொல்லப்போனால் அதைப் புரிந்து கொள்வதற்கு தீவிர வாசிப்பு தேவை. ஏதோ பக்கங்களை நிரப்பி ஒரு புத்தகத்தை ஆக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஒருபோதும் இருந்ததில்லை. அவருடைய நூல்களில் ஒரு பக்கத்தையோ , அல்லது ஒரு பத்தியையோ படித்துப் புரிந்து கொள்வதற்கும் ஒவ்வொரு சொற்களையும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

டாக்டர் அம்பேத்கர் எழுதிய எல்லா நூல்களைப் படிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் நிச்சயம் இந்த ஒரு ஆயுள் போதாது. அல்லது தொடர்ந்து

இடைவிடாமல் 20 ஆண்டுகளுக்கு மேலாக அவர் எழுதிய நூல்களை மட்டும் படித்தால் ஓரளவு உள்வாங்க முடியும். அதனால் அவர் எழுதிய எல்லா நூல்களைப் படிக்க முடியாவிட்டாலும், ஒரு சில குறிப்பிட்ட நூல்களைப் படிக்க விரும்பினால் முழு விடுதலைக்கான வழி, புத்தரும் அவர்தம் மதமும், சாதி ஒழிப்பு, காந்தியும் காங்கிரசும் தீண்டப்படாதவர்களுக்கு செய்ததென்ன உள்ளிட்ட புத்தகங்களைப் படித்தால் போதும் இந்தியாவைப் பற்றி அறிந்து கொள்வதற்கு போதுமானவை. மற்ற எந்தெந்த தேவை இருப்பினும் அந்த தேவைக்கு உண்டான புத்தகங்களை படித்து அறிந்து கொள்ளவும் முடியும்.



உலகில் அதிக புத்தகங்களைப் படித்த பெருமைக்குரிய மனிதர் டாக்டர் அம்பேத்கர் எப்பொழுதும் வாசிப்பு தான். யு.ஆர்.ராவ் அவர்கள் டாக்டர் நீங்கள் எவ்வளவு புத்தகங்களை வாங்கிக்கொண்டு சென்று சேர்த்து வைக்கிறீர்களே இவைகளை உங்களால் எப்படி படிக்க முடிகிறது என்று கேட்டதற்கு அதற்கு டாக்டர் புன்னகைத்தவாறே சில புத்தகங்களை தான் நாம் அப்படி ஆழமாக படித்து, உள்வாங்கி செரிமானம் செய்யும் நிலை உள்ளது. அவை மிகவும் சொற்பமே! மற்றவை நாம் அறிந்த பல செய்திகளின் தொகுப்பு தான். அப்படிப்பட்ட புத்தகங்களில் முக்கிய பகுதிகளை படிப்பேன். மற்றவை நமக்கு அறிமுகமான பகுதிகள்.



உலகிலேயே டாக்டர் அம்பேத்கரிடம் இருந்த நூலகம் தான் மிகப்பெரிய நூலகம். அதைக்குறித்து நாம்தேவ் காடே உங்கள் நூலகம் தான் பெரிய தனியார் இல்ல நூலகம் என்று கூறப்படுகிறதே என்று கேட்டதற்கு, அதற்கு அம்பேத்கர், அப்படி நான் உங்களிடம் பெருமையாக இதுதான் மிகச் சிறந்த தனியார் நூலகம் என்று கூறிக் கொள்ள மாட்டேன். சிறந்த தொகுப்புகள் தான் என்பது உண்மை. பனாராஸ் இந்து பல்கலைக் கழகத்திற்கு இதனை அளித்து விடுங்கள் விலைக்கு | தான் என்னிடம் கேட்டார்கள். நான் மறுத்து விட்டேன் என்று கூறினார் இப்படி தன்னிடம் அரிய பெரிய நூலகம் இருந்தபொழுதும் பெருமை கொண்டதில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஆய்வு ஒன்றை சமர்ப்பிப்பதற்கு அரசு ஆவணங்களை இந்தியா முழுவதும் எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. இறுதியாக டாக்டர் அம்பேத்கரை கேட்டபொழுது அவர்கள் கேட்ட ஆவணங்கள் அவரிடம் மட்டும்தான் அன்று இருந்தன. அதன்பிறகு அங்கு ஆய்வு செய்வதற்கு டாக்டர் அம்பேத்கரிடம் அனுமதி கேட்டார்கள். அதற்கு அவரும் உடனே இசைவு தந்தார். இப்படி தன்னுடைய வீட்டையே ஆவணக்காப்பகமாக வைத்திருந்தவர் டாக்டர் அம்பேத்கர்.



டாக்டர் அம்பேத்கரிடம் ஒருமுறை நாம்தேவ் கேட்கிறார்: 'அய்யா நீங்கள் இவ்வளவு சலிப்பின்றி, களைப்பின்றி அதிக நேரம் புத்தகங்களை எப்படி வாசிக்க உங்களால் முடிகிறது? அதன் ரகசியத்தை எங்களுக்குச் சொல்லுங்கள். இடையில் சற்று இளைப்பாறிட (Relax) மாட்டீர்களா??

அதற்குப் புன்னகைத்துக் கொண்டே பதில் சொல்கிறார் டாக்டர்.

எனக்கு இளைப்பாறுதல் என்பது ஒரு தலைப்பிலிருந்து வேறு ஒருவகையான முற்றிலும் மாறான ஒரு புத்தகத்திற்கு மாறுவதுதான் என்றார்.

டாக்டரின் நூலகத்தில் பற்பல தலைப்புள்ள நூல் வகையறாக்களும் இருக்கும். எல்லா விஷயங்கள் பற்றியதாக தெரிந்துகொள்ளும் வகையில், Theory of Relational முதல் புத்த மார்க்கம் அரசியலில் இருந்து கோழி வளர்ப்புவரை எல்லா விதமான புத்தகங்களும் இருக்கும். அவரிடம் எந்த விஷயம்பற்றியும் உரையாடி விவாதிக்கலாம்.

நீர்ப்பாசனம் தொடங்கி, அணுமின் சக்தி நிலக்கரி சுரங்கம்வரை* பலதரப்பட்ட தலைப்புகளிலும் ன்று அவர் படித்த செய்திகளையும் இணைத்துக் கூறத்தயங்கவே மாட்டார் டாக்டர்! எல்லா தலங்களிலும் ஆளுங்கள் பட்டவர். அதனால்தான் பாராளுமன்ற அமைச்சரவையில் தொழிலாளர் துறை அமைச்சர், நீர்ப்பாசனத் துறை அமைச்சர், சட்டத்துறை அமைச்சர் என்று பல துறைகளில் இருந்ததோடு அல்லாமல் அவற்றில் புதுப்புது திட்டங்களை நிறைவேற்றியவர்.

# கட்டுமானம் என்பது மனித நாகரீகத்தின் முதல் நடவடிக்கை!



கூடி வாழ்ந்ததால் கிடைத்த கோடி சுகத்தை, மனிதன் வீடுகட்டியே துவங்கியிருக்கிறான்

ஆரம்பத்தில் குகைகளில் தனக்கு தேவையானதை, எளிய வடிவில் கதவு, வெளிச்சம், காற்றோட்டம் போன்ற வசதிகளை உருவாக்கிக் கொள்ள கற்றுக்கொண்ட மனிதன், நாகரீக வளர்ச்சியினால், பின்பு தான் இருக்கும் மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறும், பல்வேறு வகையான தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்றவாறும் வீடுகளை வடிவமைத்துக் கட்ட கற்றுக்கொண்டான்.

குழைத்த களிமண் வீடுகளும், விலங்குத் தோல்களால் செய்யப்பட்ட கூடாரங்களும், கற்களை வட்ட வளையங்களாக்கிக் கட்டியவையும், இலைதளைகளாலும்.. நெடும்புற்கள், ஓலையால் வேயப்பட்ட கச்சாக் குடிசைகளும் இந்த நாகரீக காலத்தில் நினைத்துப்பார்க்கக் கூட நேரமின்மையால் ஓடிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு கண்டுபிடிப்புகளின் வெற்றியும் முடிவும் அடுத்த கண்டுபிடிப்புகளின் துவக்கமாகத்தான் இருக்க வேண்டும். இத்தனை தொழில்நுட்ப வளார்ச்சிக்குப் பின், மீண்டும் எஸ்கிமோக்கள் போல் தலை இடிக்கும் என்பதற்காக படுத்துக்கொண்டே வீட்டிற்குள் நுழைய வேண்டுமா. இருந்தாலும் அந்த இக்லூக்கள் தலையிடிக்காத பிரம்மாண்டத்தில் இன்றளவும் சில இடங்களில் கட்டப்படுவதை நாம் காணமுடியும். சட்டையை நாமே தைத்துக் கொள்வதில்லை டெய்லரிடம் கொடுக்கிறோம்!

பஸ்ஸை நாமே ஓட்டுவதில்லை.. டிரைவரிடம் தருகிறோம். கப்பலை கேப்டனிடமும், விமானத்தை பைலட்டிடமும் தந்து விடுகிறோம்.

ஆனால் கட்டுமானத்தை மட்டும் சிலர் சிக்கலாக்கிக் கொள்கிறார்கள். காஜா போடுபவனிடம் சட்டை தைக்கவும், கண்டக்டரிம் பஸ்ஸையும் கொடுத்து ஓட்டும்படிச் செய்து விடுகிறார்கள். வல்லுனர்களைக் கொண்டு அரசாங்கம் தரக் கட்டுப்பாடு, காப்பீடு, கட்டிட மேலாண்மை போன்ற அனைத்து விதங்களையும் நமக்காக வடிவமைத்துக் கொடுத்தபிறகும் சிலர், துணியைக் கிழித்து தானே சட்டை தைக்கவும் ஆரம்பித்து விடுகிறார்கள்.

இயற்கை சக்தியின் அளவுகோலைப் புரிந்து கொள்ளாமலும், அனுபவம் இல்லையென்ற சிக்கலான தன்மையின் வெளிப்பாடும், மிகப்பெரும் கைசேதத்தை தந்துவிட்டபின் நெஞ்சு வலித்து நெடுஞ்சான் கிடையாய் முடங்கிப் போனவர்களே அதிகம். ஒவ்வொரு நாட்டிலும் கட்டிடக்கலையின் ஆய்வும் வளர்ச்சியும் உலகையே வியக்க வைத்துக் கொண்டிருக்கிறது. மெசபடோமியா, ரோம், எகிப்து போன்ற காலத்து நாகரிகங்களையெல்லாம் பின்னுக்குத்தள்ளி இன்று உலகளாவிய அளவில் நம்தமிழ்க் கட்டுமான நாகரீகம் வியப்பை தந்துகொண்டிருப்பதை அகழாய்வுகள் நிறுபித்துக் கொண்டிருக்கின்றது.

பத்து லட்சம் கிலோ எடையுள்ள கல்லை எகிப்தியர்கள் நெம்புகோலால் நகர்த்தியதை விட, இராஜராஜ சோழனின் அற்புதம் உலகை நம்மை நோக்கி திருப்பியது.

தெற்கு இத்தாலியின் கிரேக்க உலகில், உள்ளூர் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட சில கோவில்கள் மிகவும் உயரிய பாதுகாப்பு கிடைக்கப்பெறுவதால் இன்றளவு உயிர் பிழைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் நம்மூர் தாஜ்மஹால் அவற்றை பின்னுக்குத் தள்ளி கம்பீரமாக ஜொலிக்கிறது. இன்றைய தொழினுட்பமானது, புதுமையான தானியங்கிக் கருவிகள், புதுவகை கட்டுமானப் பொருட்கள், இயந்திரங்கள், மென்பொருட்கள் போன்றவற்றின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கிறது.

நம்பகத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு, நிறுபிக்கப்பட்ட தொழில் நுட்பத்தை முழுமையாக ஏற்றுகொள்வது என்பது கட்டுமானத்துறையின் உற்பத்தித் திறனை சுமார் நாற்பது விழுக்காடுகளுக்கு மேல் அதிகரிக்கச்செய்யும் என்பதில் ஐயம் வேண்டாம்.

தொழில் நுட்பங்கள் அனைத்தும், தரம், நம்பகத்தன்மை, உற்பத்தித் திறன், பாதுகாப்பு போன்ற எல்லா நிலைகளிலும் மிகவும் பெரிய வெற்றிகரமான பயன்பாடாக நிறுபிக்கப்படுகின்றன.

இவையனைத்தும் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணை புரிகின்றன.



**எம்.சிக்கந்தர் ஷா,**

உரிமையாளர், அபு கன்ஸ்ட்ரக் ஷன்ஸ்
சென்னை.

# தத்துவக் கவிதை



கரம் கோர்த்து வாழவில்லையெனினும்...
காலம் முழுவதும் அவங்களுக்காக
பிரார்த்தனையும் செய்யும்..

இந்த காதல் பொல்லாதது...

எவ்வளவு தட்டியும்
திறக்கப்படவில்லை எனில் .
அந்த கதவை
தட்டி எந்த பலனும் இல்லை,
மேலும்
உனக்கான வழியும் இல்லை...அது..!!





எல்லாமே
பொக்கிஷங்கள் தான்..
கிடைக்கும் முன்பும்
இழந்த பின்பும்..!

புறக்கணிப்பு தரும் மனவலிக்கு அஞ்
சாதவர்கள் இல்லை.

மரணத்தை எதிர்கொள்ள துணிபவர்களால் கூட
புறக்கணிப்பை எதிர்கொள்ள முடிவதில்லை.,

நட்பின் புறக்கணிப்பு, அன்பின் புறக்கணிப்பு
எல்லாம் எவரையும் வீழ்த்திவிடும்
சக்திகொண்டவை...



# கொழுப்பை எரிக்கும் கேழ்வரகு



**சி**றுதானியங்களில் ராகி என்று அழைக்கப்படும் கேப்பை அல்லது கேழ்வரகு, தேவ உணவாக கருதப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் King of Millets என்று கூறுவார்கள். கேழ்வரகில் இருக்கும் மிதியோனை என்னும் அமினோ அமிலம் முதுமையை தடுக்கிறது. இது லெசித்தினுடன் இணைந்து, அதிகப்படியான கொழுப்பை கரைக்கிறது. இதில் அமினோ அமிலங்கள், நார்ச்சத்து மிக அதிகமாக உள்ளது, இது எடை அதிகரிக்க ஒரு போதும் அனுமதிக்காது. அது மட்டும் இன்றி, உடலை ரிலாக்ஸ் செய்து, டென்ஷன் மைக்ரேன் என்ற ஒற்றைத் தலைவலி, தூக்கமின்மை போன்ற தீர்வாக அமைகிறது.

நீங்கள் உடல் எடையை குறைக்க விரும்பினால், ராகி ரொட்டி, ராகி தோசை, ராகி இட்லி போன்றவற்றை உங்கள் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளவது சிறந்த பலனைக் கொடுக்கும். எடை இழப்புக்கு ராகி எந்த வகையில் பலன் அளிக்கிறது மற்றும் அதை சாப்பிடுவதற்கான சரியான வழி என்ன என்பதை அறிந்து கொள்வோம்.

ராகி நார்ச்சத்து நிறைந்த தானியமாகும். நார்ச்சத்து உட்கொள்வதால் வயிறு நிறைந்த உணர்வு நீண்ட நேரம் நீடிக்கும். இதன் காரணமாக, உங்களுக்கு விரைவாக பசி ஏற்படாது. இதனால் கன்னாபின்னாவென்று எதையும் சாப்பிடுவதும் தவிர்க்கப்படும்.

ராகி புரதம் நிறைந்தது. புரதம் தசையை உருவாக்குகிறது. ராகியை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், உடலில் கொழுப்பு எரிப்பதில் எந்தப் பிரச்சனையும் இருக்காது. ஏனெனில் வலுவான தசைகள் அதிக கொழுப்பை எரிக்க உதவுகின்றன. இருப்பினும், உடல் எடையை குறைக்க விரும்புவோர், தாங்கள் உட்கொள்ள வேண்டிய ராகியின் அளவை உணவு நிபுணரிடம் ஆலோசிக்கவும்.

ராகியை எந்த வடிவில் சாப்பிட்டாலும், உடலில் இரத்த சர்க்கரை அளவு சீராக இருக்கும். ராகி நார்ச்சத்து நிறைந்த தானியமாகும். நார்ச்சத்து உட்கொள்வதால் வயிறு நிறைந்த உணர்வு நீண்ட நேரம் நீடிக்கும். இதன் காரணமாக, உங்களுக்கு விரைவாக பசி ஏற்படாது. இதனால் கன்னாபின்னாவென்று எதையும் சாப்பிடுவதும் தவிர்க்கப்படும்.

இது விரைவாக பசியை ஏற்படுத்தாது. எடை அதிகரிப்பு பிரச்சனையை நீங்கள் தவிர்க்கலாம்

உடல் எடையை குறைக்க வேண்டுமானால், காலையில் ராகியை சாப்பிட வேண்டும். ராகி கஞ்சி, ராகி இட்லி, ராகி தோசை போன்றவற்றை காலை உணவில் உட்கொள்வது ஆரோக்கியமாக இருப்பதுடன் எடையைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. ராகி ரொட்டியை இரவில் சாப்பிட வேண்டும். மாலையில் பசி எடுத்தால், ஆரோக்கியமற்ற தின்பண்டங்களைச் சாப்பிடுவதற்குப் பதிலாக, ராகியினால் செய்யப்பட்ட இனிப்பு உருண்டைகள் அல்லது தின்பண்டங்கள் போன்றவற்றை உட்கொள்வது எடையைக் குறைக்கும்.



கேழ்வரகு நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்துகிறது. ரத்த சோகை உள்ளவர்களுக்கு ராகி ஆரோக்கியமானது. ராகி எலும்புகளை வலுவாக்கும். சர்க்கரை நோயாளிகளுக்கு கேழ்வரகு ஒரு வரப்பிரசாதம் எனலாம். உடல் எடையை குறைக்க, ராகியை சாப்பிடுங்கள். மலச்சிக்கல் பிரச்சனையை நீக்கவும் ராகி உதவும். கேழ்வரகில் உள்ள நாசத்துக்கள் மலச்சிக்கலை தடுக்கின்றன.செரிமான சக்தியை அதிகரித்து, வயிற்றின் ஆரோக்கியத்தை ஆரோக்கியமாக வைக்கிறது. பருக்கள், கருவளையங்கள், முகச்சுருக்கள், சரும சுருக்கங்கள் போன்ற தோல் தொடர்பான பிரச்சனைகள் உள்ளவர்கள் ராகியை சாப்பிட வேண்டும்.சருமத்தை பளபளப்பாக மாற்றும். இதில் லைசின் என்ற உறுப்பு உள்ளது, இது சருமத்தை இறுக்கமாக்குகிறது.

**– மன்னை பாண்டியன்**

மித்ரா கிட்சன்

# பனீர் சீஸ் பிரட் ரோல்



**தேவையான பொருட்கள்:** துருவிய சீஸ் – 1 கப், 2. துருவிய பனீர் – 1 கப், பிரட் சிலேஸ் – 6, வெண்ணெய் – 50 கிராம், கிரீன் சில்லி சாஸ் – தேவையான அளவு, Tomato ketchup, குடைமிளகாய் -1, சில்லி பவுடர் -1 spoon, மிளகுத்தூள் – அரை ஸ்பூன், இஞ்சி பூண்டு விழுது -1_ spoon, உப்பு, கொத்தமல்லி சீரகத்தூள் – அரை ஸ்பூன் .

**செய்முறை :** முதலில் ஒரு கிண்ணத்தில் துருவிய பனீர் 1 கப், துருவிய சீஸ் 1 கப், சிறிது சிறிதாக வெட்டிய குடைமிளகாய், 3 ஸ்பூன் சில்லிபவுடர், இஞ்சி பூண்டு விழுது, சீரகத்தூள் அரை ஸ்பூன், மிளகு தூள் அரை ஸ்பூன், நறுக்கிய கொத்தமல்லி, சிறிதளவு , Tomato ketchup 5 spoon, தேவையான அளவு உப்பு சேர்த்து ஒன்றாக கலந்து வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து பிரட் சிலேஸ்களின் நான்கு ஓரங்களை கட் செய்யவும். பிறகு பிரட் சிலேஸ்களை சப்பாத்தியைப் போல உருட்டிக் கொள்ளவும். பிறகு Green chilli sauce பிரட்டின் மேல் தடவிக் கொள்ளவும். பிறகு நாம் கலந்து வைத்துள்ள பனீர் சீஸ் கலவையை கையில் எடுத்து நீள வாக்கில் ரோல் செய்து உருட்டிய பிரட்டில் வைத்துக் கொள்ளவும். பிறகு நன்றாக இறுக்கமாக ரோல் செய்து கொள்ளவும். எல்லாவற்றையும் ரோல் செய்த பிறகு Grill pan – தோசை தவாவில் வைத்து வெண்ணெய் சேர்த்து டோஸ்ட் செய்து கொள்ளவும். இப்பொழுது சூடான அட்டகாசமான பனீர் சீஸ் பிரட் தயார்.

இதனுடன் Tomato ketchup சேர்த்து பறிமாறவும்.



S.கவிதா
சிட்லபாக்கம்


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |



# On the way on life

At 60, the workplace eliminates you. No matter how successful or powerful you were during your career, you'll return to being an ordinary person. So, don't cling to the mindset and sense of superiority from your past job, let go of your ego, or you might lose your sense of ease!

At 70, society gradually eliminates you. The friends and colleagues you used to meet and socialize with become fewer, and hardly anyone recognizes you at your former workplace. Don't say, "I used to be..." or "I was once..." because the younger generation won't know you, and you mustn't feel uncomfortable about it!

At 80, family slowly eliminates you. Even



if you have many children and grandchildren, most of the time you'll be living with your spouse or by yourself. When your children visit occasionally, it's an expression of affection, so don't blame them for coming less often, as they're busy with their own lives!

At 90, the Earth wants to eliminate you. Some of the people you knew have already departed forever. At this point, don't be sad or mournful, because this is the way of life, and everyone will eventually follow this path!

Therefore, while our bodies are still capable, live life to the fullest! Eat what you want, drink what you desire, play and do the things you love.

# இருப்பதை எண்ணி இன்பம் கொள்வோம்!



**கேள்வி:** என்னோட வாழ்க்கையில் எல்லாமே கவலையாக மட்டும் இருக்கிறது. வேலை இல்லை, கல்யாணம் ஒரு கனவு. எல்லாரும் இருந்தும் பணம் இல்லை. வாழ்க்கையை முடித்துக் கொள்வது சிறப்பு என்று தோன்றுகிறது. எப்படி வாழ்வது எனக்கென்று எதுவும் இன்றி.

**பதில்:** கொஞ்சம் மனச தேத்திக்கோங்க. உங்களுக்கு ஒரு கொடிய நோய் வந்திருக்கு. நீங்க மனசு வச்சா சீக்கிரம் குணப்படுத்திடலாம்.

இந்த நோய்க்கு ஆங்கிலத்துல MTSனு சொல்வாங்க. அதாவது Missing Tile Syndrome. இது உளவியல் சம்பந்தபட்ட நோய்.

இந்த நோய பத்தி எளிதா சொல்லணும்னா இந்த குட்டி கதையப் படிங்க...

அது ஒரு பிரமாண்ட நட்சத்திர ஹோட்டல். ஒரு அழகான நீச்சல் குளத்தை அந்த ஹோட்டல் நிர்வாகம் கட்ட முடிவு பண்ணி, எல்லாரும் வியக்கிற மாதிரி அதையும் கட்டி முடிச்சாங்க. அந்த நீச்சல் குளத்தை சுத்தி இத்தாலியன் மார்பிள்ஸ் டைல்ஸ் முழுசா பதிச்சாங்க. அந்த டைல்ஸ்லாம் மின்னொளி வெளிச்சத்துல அப்டி ஜொலிச்சுது. ஆனா ஒரு டைல்ஸ் மட்டும் கவனக்குறைவால பதிக்க மறந்துட்டாங்க. மொத்தம் 425 டைல்ஸ், அதுல ஒரு டைல்ஸ் மட்டும் இல்லாம நீச்சல் குளம் மக்கள் சேவைக்காக திறக்கப்பட்டது.

ஆரம்பத்துல மக்கள் எல்லாரும் பாத்து பிரம்மிச்சு போய்ட்டாங்க. கொஞ்ச நேரம் கழிச்சு தான் அந்த விடுபட்ட டைல்ஸ் இடத்த பாத்து குறை சொல்ல ஆரம்பிச்சாங்க. 424 டைல்ஸ் அழகை மொத்தமா மறந்து, விடுபட்ட அந்த ஒரு டைல்ஸ் என்பது மட்டும் பேச ஆரம்பிச்சாங்க.

இப்போ புரிஞ்சிருக்கும்னு நெனைக்கிறேன். இது எல்லாருக்கும் வர நோய் தான்.

நம்ப முக்கால்வாசி நேரம் நம்மகிட்ட என்ன இல்லனு மட்டும் தான் யோசிப்போம்.

நம்ப எவ்வளவு தான் கஷ்டத்துல இருந்தாலும் இந்த உலகத்துல நம்பள விட கஷ்டப்படுறவங்க இருக்கத் தான் செய்வாங்க. இந்த வாழ்க்கையாவது நமக்கு கிடைக்காதா என்று பல்லாயிரம் பேர் தினமும் கடவுளிடம் வேண்டுகிறார்கள்.

*நாம இப்போ வாழுற வாழ்க்கை, பல கோடிப் பேரோட கனவு.* உள்ளதை கொண்டு "உவகை" அடைவோம்.

**- கவிஞர் சுகந்தீனா**

நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

தொடர் 20

# வாராக் கடன் திரும்ப வருமா?



துடுப்பதி ரகுநாதன்

இந்தியாவில் எத்தனையோ அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஒவ்வொரு அரசியல் கட்சிகளிலும் பல நல்ல தலைவர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் எல்லோரும் அற்புதமாக அழகாகப் பேசுகிறார்கள். நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக அன்றாடம் பாடுபடுவதாக சொல்கிறார்கள்! கேட்க மிக மகிழ்ச்சியாக இருக்கிறது!

அவர்கள் மிக செல்வாக்கோடு பாராளுமன்ற உறுப்பினர்களாகி மிக உயர்ந்த பதவிகளுக்கு எல்லாம் வந்து விடுகிறார்கள்!

நாட்டின் கடன் சுமை தலைக்கு மேல் போய் கொண்டிருக்கிறது என்று மிகவும் கவலைப் படுகிறார்கள்!

அவர்கள் இந்தியா வெளி நாடுகளில் வாங்கியிருக்கும் கடன் தொகையைச் சொல்லும் பொழுது நமக்கு தலையைச் சுற்றுகிறது.!

அன்றாட அத்தியாவசிய தேவைக்கு போராடும் நம்மைப் போன்ற சாதாரண மக்களால் நாட்டின் கடன் சுமையை குறைக்க முடியாது. செல்வாக்கு உள்ள அனைத்து அரசியல் தலைவர்களும் ஒன்று சேர்ந்து இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றலாம்! அதனால் இந்தியாவின் கடன் சுமை நிச்சயம் குறைந்து விடும் என்று நினைக்கிறேன்!

என்னை விட அறிவிலும் சட்ட நுணுக்கங்களும் தெரிந்த அறிஞர்கள் நாட்டில் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள்!

என்னைப் போன்றவர்களின் அரசியல் அறிவு எல்லாம் தினசரி பத்திரிகைகளில் வரும் செய்திகளை வைத்து தான்! இப்பொழுதெல்லாம் வீட்டுப் பூட்டுகளை உடைத்தும், வங்கிகள், நிதி நிறுவனங்கள், கோயில்கள் என்று எல்லா இடங்களைகளிலும் பூட்டை உடைத்து நகைகளை, கொள்ளையடித்து விட்டு போய் விடுகிறார்கள்!



நம் காவல் துறையினரும் தங்கள் கடின உழைப்பால் அந்த நகைகளை கொள்ளை அடித்தவர்களை சில நாட்களில் பிடித்து விடுகிறார்கள்! அந்த சில நாட்களுக்குள் அந்த நகைகளைத் திருடிய அந்த திருடர்கள் பலரிடம் குறைந்த விலைக்கு நகைகளை விற்று பணம் பண்ணி விடுகிறார்கள்!

காவல் துறையினர் அந்த திருட்டு நகைகளை வாங்கியவர்களிடம் போய் அந்த நகைகளை திரும்ப பெற்று வந்து விடுகிறார்கள்.

திருட்டு நகைகளை வாங்கியவர்கள், திருடர்களிடம் கொடுத்த அவர்கள் பணத்தைக் கூட யாரும் அவர்களுக்குத் திருப்பித் தந்ததாகத் தெரியவில்லை!

அவர்கள் “பணம் போச்சே!...” என்ற கதறிய செய்திகளைத் தான் நான் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன்.

நமது சட்டம் திருட்டுப் போன நகைகள் எங்கிருந்தாலும் அதை பறிமுதல் செய்ய இடம் கொடுக்கிறது!

அதே போல் அரசு வங்கிகளில் மோசடி செய்து மோசடிக் கும்பல் கொண்டு போன பணம் எங்கு பத்திரமாக இருந்தாலும் அதை திரும்ப அரசு கஜானாவுக்கு கொண்டு வர ஒரு சட்டம் இயற்றினால் என்ன? அப்படி ஒரு சட்டம் இயற்றி அரசு வங்கிகளில் கடன் என்று வாங்கிய அந்த மோசடி கும்பல் அந்தப் பணத்தை யாரிடம் கொடுத்து வைத்திருந்தாலும், அந்த பணத்தை அவர்களிடம் போய் அந்த மோசடி கும்பல் கொடுத்த பணத்தை பெற்று அவைகளை வாங்கி அரசு கஜானாவில் சேர்க்க அந்த சட்டம் இடம் கொடுத்தால் அரசு கடன் சுமை நிச்சயமாக குறையும்!

கடந்த பத்து வருடங்களில் 11,68,095 கோடிகளை வங்கி கடன்களை அரசு தள்ளுபடி செய்திருப்பதாக ஒரு செய்தியை பார்த்தேன்!

அப்படி 11,68,095 கோடிகளை கடன் வாங்கியவர்கள் யார் யார் என்று முதலில் ஒரு பட்டியல் எடுத்து வைத்துக்



**கட்டுரையாளர் 41 ஆண்டுகளுக்கு முன்பு சேலம் வங்கி முன்பு ஆர்ப்பாட்டம் நடத்திய காட்சி.**

கொண்டு ஒவ்வொருவரும் வங்கிப் பணம் கிடைத்தவுடன் முதலில் யார் யாருக்கு எவ்வளவு கொடுத்தார்கள் என்ற ஒரு ஒரு ஜாபிதா தயாரிக்கலாம்!

அவர்கள் கைக்கு சுலபமாக கோடிக் கணக்கில் பணம் வரும் பொழுது அவர்கள் தங்களுக்கு பிரியமான உயர் வங்கி, அரசு அதிகாரிகளுக்கு அன்பளிப்பும், பிடித்த கட்சிகளுக்கு நன் கொடைகளும் தந்திருப்பார்கள்!

அவைகளை ஒரு லிஸ்ட் எடுத்துக் கொள்ளலாம்! வாங்கிய கடனை அவர் வட்டியோடு திருப்பிக் கட்டியிருந்தால் அது அவருக்குச் சொந்தம். அவர் யாருக்கு வேண்டுமானாலும், அன்பளிப்போ, நன் கொடையோ தர அவர்களுக்கு உரிமை உண்டு!

ஆனால் இந்தப் பணமோ அரசு வங்கிகளில் இருந்து மோசடி செய்து கொண்டு வந்த பணம். அதனால் அந்தப் பணத்தை நன்கொடையோ, அன்பளிப்போ யாருக்கும் தர அவர்களுக்கு உரிமை கிடையாது.

நகை திருட்டில் நகை எங்கிருந்தாலும் காவல் துறையினர் பறிமுதல் செய்வதைப் போல் இந்த



மோசடிப் பணம் எங்கு பத்திரமாக இருந்தாலும் அதை மீண்டும் பறிமுதல் செய்து அரசு கஜானாவுக்கு கொண்டு வரும்படி புதிய சட்டம் இருக்க வேண்டும்!

நான் சிறுவனாக இருக்கும் பொழுது அரசியல் கட்சி கூட்டங்களுக்குப் போய் மண் தரையில் உட்கார்ந்து கேட்பேன். கூட்டத்தின் நடுவில் சிலர் உண்டியல்களை எடுத்துக் கொண்டு கட்சி நிதி கேட்டுக் கொண்டே வருவார்கள். நான் கூட எனக்குப் பிடித்த கட்சிகளுக்கு நாலணா, எட்டணா போட்டது உண்டு!

அரசியல் கட்சிகளுக்கு நிதி திரட்டும் பணி இன்றும் தொடர்கிறது!

இப்பொழுதெல்லாம், 'செக்'காகவும், 'டிராப்டு'களாகவும் வாங்கி விடுகிறார்கள் என்று மட்டும் தெரிகிறது. அது தப்பு இல்லை!

கடந்த பத்து ஆண்டுகளில் வங்கியில் வராக்கடன் என்று தள்ளுபடி செய்த தொகை ரூ 11,68,095 கோடிகளாம்!

அந்த பணம், அரசு வங்கிகளில் மோசடி செய்த பணம்!

திருட்டுப் போன நகைகளை காவல் துறையினர் கண்டு பிடிப்பது போல், இந்த அரசு வங்கிகளில் மோசடி செய்த பணத்தை எங்கு எங்கு எப்படி தொலைத்தார்கள் என்று ஆய்வு செய்தால் அதில் பல ஆயிரம் கோடிகளை அவர்களுக்கு பிடித்த அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாக தந்திருக்கலாம். வங்கி அரசு அதிகாரிகளுக்கு அன்பளிப்பாகவும் பெரிய தொகைகளை கொடுத்திருக்கலாம்!

அந்தப் பணம் இன்றளவும் பத்திரமாகத் தான் இருக்கும்! அவைகளை அவர்களிடமிருந்து வாங்கி அரசு கஜானாவில் செலுத்தினாலே அரசுக்கு பல ஆயிரம் கோடி சுலபமாக கிடைக்கும்!

இதை எல்லாம் நல்லவர்களும், சட்ட நிபுணர்களும் யோசித்து உயர் நீதி மன்ற, உச்ச நீதி மன்ற நீதிபதிகளை கலந்து அரசு வங்கிகளை மோசடி செய்து ஏமாற்றியவர்கள் அந்தப் பணத்தை எங்கெங்கு பத்திரமாக கொடுத்து வைத்திருந்தாலும் இருந்தாலும், கண்டு பிடித்துத் திருட்டு நகைகள் வாங்கியவர்களிடம் எப்படி அந்த நகைகளை பறிமுதல் செய்கிறார்களோ, அது போல் அரசு வங்கிப் பணம் எங்கிருந்தாலும் அதை பறிமுதல் செய்யலாம் என்ற சட்டம் கொண்டு வந்தால் இந்த வாராக் கடன் தொகை நிச்சயம் குறையும்.

இது போன்ற அன்பளிப்புகளையும் நன்கொடைகளையும் அரசு திரும்ப பெற்றுக் கொள்ளும் என்பதை அனைத்து மக்களும் உணர்ந்தாலே நிச்சயமாக எதிர் காலத்தில் வராக் கடன் தொகை மிக குறைந்து விடும் வாய்ப்பும் உண்டு!

# பல குரல் எழுப்பும் பரவசப் பறவைகள்!

முனைவர். பா. ராம் மனோகர்



நம் மனித இனத்தில், ஒருவர் மற்றொரு நபர் போல் இருக்கும் நிலையில், அவரின் தோற்றம் கண்டு வியப்பு அடைவது போல், பிரபலமான ஒருவர் குரல் போல் மற்றொருவர் பேசுவது கண்டு மகிழ்ச்சி அடைவது இயல்பாக தற்போது உள்ளது. இதனால் புகழ் பெற்றுகலைத்துறையில் வாய்ப்புகள் பெற்று உயர்வுகள் அடைகின்ற நிலையும் நாம் சமீபத்தில் காணுகின்றோம்!



எனினும் இதே போன்ற நடத்தை செயல்பாடுகள் பறவைகளிலும் காணப்படுகிறது. இதனை "போலசெய்தல்"(மிமிமிமிசிஸிசி)என்று அழைக்கிறார்கள். மேலும் இந்த நடத்தை அனைத்து பறவைகளிடம், இருப்பது இல்லை. ஒரு சில குறிப்பிட்ட பறவைகள் மட்டும் இந்த அரிய, அபூர்வ செயல் செய்வது உண்மையில் ஆச்சரியம் அளிக்கிறது. துடுப்பு வால் கரிச்சான் (RACKET TAIL DRONGO), மலை மைனா ((COMMON HILL MYNA), வெண்பின்புற, ஷாமா பறவை (WHITE RUMPED SHAMA), பச்சை சிட்டு (GOLDEN FRONTED CHLOROPSIS or LEAF BIRD), வெண் வயிற்று கரிச்சான், நாட்டு கரிச்சான் (BLACK DRONGO) போன்ற பறவைகள் தம் திறமையால் குரலினை வெவ்வேறு முறையில் மாற்றம் செய்து பல பறவைகள் போலவும், ஒலிகளை எழுப்புகின்றன. இந்த குறிப்பிட்ட பறவைகள் வெவ்வேறு விதமான ஒலிகள் எழுப்பி வருவதற்கு காரணங்கள் என்ன?



எச்சரிக்கை ஒலி, தன் இணையின் கவனத்தினை ஈர்ப்பது, எதிரிகள் வருகையில் அச்சம் கொண்டு, உரத்த குரல் எழுப்புவது ஆகிய முக்கிய நடத்தைகள் குறிப்பிட தக்கது. இவ்வாறு பறவைகளின் ஒலி வேறுபாட்டுக்கு அவற்றின் தொண்டை பகுதியில் உள்ள சிரிங்க்ஸ் (SYRINX )என்ற ஒலி பெட்டியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணம் ஆகும்.



பறவைகள் பல்வேறு குரல் எழுப்பும் அறிவியல் பற்றிய ஆய்வினை பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் (INDIAN INSTITUTE OF SCIENCE ) சார்ந்த சமீரா அக்னி ஹோத்ரி என்ற பெண் 18 ஆண்டுகள் மேற்கு மலைத்தொடரில், கள பயணங்கள் செய்து மேற்கொண்டு வந்தார். குறிப்பாக துடுப்பு வால் கரிச்சான் பறவை பற்றிய ஆய்வு , குறிப்பாக அவை பல்வேறு ஒலிகள் எழுப்புவது பற்றி இருந்தது. இப்பறவை கரு நிறம் கொண்டு, நீண்ட வால் அமைந்துள்ள உயிரினம், வாலின் முடிவில் துடுப்பு வடிவம் உள்ளது. எடை 120கிராம் ஆகும்.இதன் குரல் பல்வேறு விதமான சீழ்க்கை (whistle )கொண்டுள்ளது.



இந்த ஒலிகள் மற்ற பறவைகள் கவனத்தினை மாற்றக்கூடியது. இனப்பெருக்க காலத்தில் இணையினை கவருவதற்கு பயன்படுகிறது. துடுப்பு வால் கரிச்சான் பறவைகள் ஒலி பற்றிய பல்வேறு தகவல்கள், மேற்கு மலைத்தொடரில் உள்ள சோலிகர் என்ற பழங்குடி இன மக்கள் அறிந்து வைத்துள்ளனர். பல்வேறு பறவைகளின் ஒலிக்குறிப்புகள் இந்த பகுதி மக்களுக்கு மிகவும் பரிச்சயமாக இருந்து வருவது வியப்பு தருகிறது. மேலும் இந்த பழங்குடி மக்கள் தாய்மொழி வேறுபாடு கொண்டு ஒலி வடிவில் மட்டும் உள்ளது. எழுத்து வடிவம் இல்லை. எனவே இவற்றை பற்றிய ஆய்வினையும், ஜெர்மனி நாட்டில் உள்ள கொலோன் பல்கலைக்கழகம், மொழியியல் துறையுடன் இணைந்தும் அங்கு ஆய்வாளர் மேற்கொண்டு வந்தனர். பெரும்பாலும் மைனா என்ற நார்த்தங்குருவிகள் அழகான குரல் உருவாக்கி,மக்களை எளிதில் கவரக்கூடியன. மேலும் மலை மைனா என்ற பறவையின் தலைக்கு அருகில் முக பக்க வாட்டு பகுதியில் சிறு தொங்கு தசை காணப்படும். இதுவும் மிக சிறப்பாக குரல் வெவ்வேறு முறையில் 3முதல் 13 வித ஒலிகள் எழுப்பும். ஆனால் இவற்றை செல்ல வளர்ப்பு பறவைகளாக (CAPTIVE PET BIRD ) மனிதர்கள் வைத்திருப்பது வழக்கம் ஆகும். அப்போது மனித குரலினை கேட்டு, அல்லது கற்றுக் கொடுக்கும் நிலையில் இவைஅதிகம் ஒலி மாற்றம் செய்கின்றன. வெண் பின்புற ஷாமா பறவைகள் தென் கிழக்கு ஆசிய காடுகளில் வசிக்கின்றன. இப்பறவைகள் மரங்களின் கிளையில் ஒளிந்து மறைந்து அமரக்கூடியவை. அங்குள்ள இப்பறவைகள், நல்ல உரத்த அழுத்தம் கொண்ட ஒலிகள், இனிமையான முறையில் உருவாக்கும் அரிய தன்மை கொண்ட உயிரினங்கள் ஆகும். பச்சை சிட்டு என்ற இலை பறவை சிறிய உடல் அமைப்பு கொண்டவை. சீனா, தென் கிழக்கு ஆசியா, சுமத்ரா போன்ற நாடுகளில் காணப்படும்.

20 செண்டி மீட்டர் நீளம் உள்ள இந்த பறவை, மர உச்சியில் உட்கார்ந்து, நீர் தெளிப்பு போன்ற ஒலியுடன் கூடிய சீழ்க்கை எழுப்பி, கடினமான முனகல் ஒலி கொண்டு ஒவ்வொரு முறையும் மிக ஆச்சரியம் கொண்ட குரலில் தன் நிலை உணர்த்தும்.வெண் வயிற்று கரிச்சான் பறவை, கருமை நிற, பள, பளப் போடு மேல் பகுதியில் காணப்படும்.

தொண்டை , மார்பு லேசான இளம் பழுப்பு வண்ணத்தில்வயிறு மற்றும் வாலின் பின் பகுதியில் வெண்ணிற மாக உள்ளது. இப்பறவை இந்தியா, ஸ்ரீலங்கா, இமாலய தெற்கு பகுதியிலும், கங்கை டெல்டா மேற்கு பகுதிகளில் அதிகம் வசிக்கின்றன. இந்த பறவை அதிக முரட்டு நடத்தையும், தைரியம் கொண்டவை. இவை தங்கள் கூடுகள் பாதுகாப்பு, உணவு தேடும் போட்டி, ஆகிய நிலைகளில் வெவ்வேறு குரல் எழுப்பி நம்மை வியக்க செய்யும். இதன் குரல் விட்டு, விட்டு, இசை போன்று துவங்கி, நீண்ட கடும் சீழ்க்கை ஒலி உருவாக்கி, தன் எல்லை காக்கின்றன. பொதுவாக DRONGO கரிச்சான் பறவைகள் மிகுந்த சுறு, சுறுப்பு வேகம் கொண்டு தன் இருப்பினை எல்லோரும் அறிய செய்யும் தன்மை பெற்றவை ஆகும். ஆஸ்திரேலியா நாட்டில் லயர் என்னும் யாழ் பறவை, மிகுந்த வேறுபட்ட குரல் ஒலிகள் தரக்கூடிய உயிரினம் ஆகும். அனைத்து உயிரினங்களிலும்,ஐம்புலன் களில் ஒன்றான ஒலி எழுப்புவதில், இனிமை கலந்தது பறவைகள் பாடல் மட்டும் தான், அவற்றில் பொருள் உள்ளது, அவற்றின்அன்றாட வாழ்க்கை செயல் பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. எல்லை, கூடு காத்தல், இனப்பெருக்கம், காதல், உணவு தேடல், எச்சரிக்கை போன்ற நடத்தைகள் சாதாரண மனிதர்களுக்கு புரியாத நிலையில் ஒலிக்குறிப்புகள் பறவைகளுக்கு உதவுகிறது என்றால் மிகையில்லை. இயற்கை மிக அழகு கொண்டவை, அதில் பறவைகள் வண்ணம், வடிவம், செயல், மற்றும் ஒலி ஆகியவற்றால் வேறுபாடு கொண்டிருந்தாலும் இவற்றைநாம் உணர்ந்து ரசிக்கும் போது மன அமைதி எளிதில் பெற முடியும் என்பதில் ஐயமில்லை.

# எம் பதில்கள்

**சமீபத்தில் நெகிழ வைத்த நிகழ்ச்சி ஏதாவது?**

அண்மையில் இயக்குனர் இமயம் பாரதிராஜா உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது மருத்துவமனைக்கு வந்து நலம் விசாரித்த கவிப்பேரரசு வைரமுத்து, பாரதிராஜாவை சந்தித்தார். அவருக்காக கவிதை ஒன்றை வாசித்து காட்டி, அதை வீடியோவாகவும் பதிவு செய்து தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

பொதுவாக திரையுலகில் நட்பு என்பது தொடர்ந்து வருவது அதிசயமும் ஆச்சரியமும் கலந்த ஒன்றாகும். ஏனென்றால் பணம் ஈகோ இந்த இரண்டும் திரை உலகில் யாரையும் தொடர்ந்து நட்போடு பயணிக்க வைக்காது.

அந்த சந்திப்பில் அவரின் கவிதையைக் கேட்ட பாரதிராஜா"100 டாக்டர்கள் என்னை பின்னாடி இருந்து எழுப்புவதை விட உங்கள் கவிதை என்னை தூக்கி நிறுத்தி விட்டது" என்று குழந்தையைப் போல குதூகலமாக சொன்னது நம்மை நிகழ்ச்சிக்கு ஆளாகிவிட்டது.

எழுதியதோடு நிற்காமல் கவிஞர் வைரமுத்து தானே பாடிய அந்த பாடலில் பாரதிராஜா யார் என்பதையும் அவர் சாதனையையும் மொத்தத்தையும் குறிப்பிட்டு விடுகிறார்.

நாயகன் படத்தில் இடம்பெற்ற இளையராஜாவின் தென்பாண்டி சீமையிலே பாடலை அதே மெட்டில் அந்தப் பாடலை அமைத்திருந்தார்.

தென்மேற்கு சீமையிலே

தேனி நகர் ஓரத்திலே

பால்பாண்டி யாக வந்தவன் தான்

பாரதிராஜா!

பாரதிராஜா! பாரதிராஜா!

பிறந்த இடமோ கள்ளிக்காடு பிரியம் வளர்த்தான் கலையோடு வறுமை கொடுத்த வலியோடு வாழ்வே அவனின் வழிபாடு (தென் பாண்டி)

சோகப் பட்ட பொழப்புக்குள்ள ஏகப்பட்ட கதை எடுத்து பாவப்பட்ட வாழ்க்கை சொன்னான் பாரதிராஜா!

உழுத புழுதி படமாச்சி!

உரலு ஒலக்கை கதையாச்சி! ஆட்டு புழுக்கை கலையாச்சி! மாட்டு குரல்தான் இசையாச்சி!

(தென்பாண்டி)



வீட்டுக்குள்ள படம் புடிச்சு காட்டி வந்த காலத்துல வெட்ட வெளி படம் எடுத்தான் பாரதிராஜா!

வருச நாட்டு மழையாக

வைகை ஆற்று அலையாக மேற்கே தொடர்ச்சி மலையாக மேலும் வாழ்க நிலையாக

(தென் பாண்டி)

**பெண் எப்போது அழகாகிறாள்?**

அதிகாலை பனியில் நனைந்த படியே கோலம் போடும் போது!

தாவணிக் கோலத்தில் சுபநிகழ்ச்சிகளில் அங்கும் இங்கும் வலம் வரும்போது! பேச்சில் ஆங்கிலம் கலக்காமல், படிக்காதவர்களிடம் அவர்களுக்கு புரியும் விதத்தில் தெளிவாக பேசும் போது!

அழகை திமிராகக் காட்டாமல், ஆண்களை மதித்து நடக்கும் போது! யார் மனதையும் புண்படுத்தாமல், தன் மனதில் இருப்பவனின் கை பிடிக்க 'எவ்வளவு நாள்?' என்று கேள்வியே கேட்காமல் காத்திருக்கும் போது! அச்சப்பட வேண்டிய இடங்களில் மட்டும் அச்சப்பட்டு கம்பீரமாய் இருக்க வேண்டிய இடங்களில் கம்பீரமாய் இருக்கும் போது!

காதில் இருக்கும் கம்மல் தன் பேச்சுக்கு தாளம் போடும் படி, தலையை ஆட்டி ஆட்டி பேசும் போது!

தம்பி தங்கைகளுக்கு இன்னொரு தாயாய் இருக்கும் போது! தந்தையின் குடும்ப கஷ்டத்தில் பங்கெடுத்துக்



கொள்ளும் போது! ஆபாசமில்லாத உடையணிந்து, அழகை எப்போதும் மறைத்தே வைத்திருக்கும் போது!

ஆண்கள் கூட்டத்தை கடக்கும் போது, 'நம்மை ஏதேனும் சொல்லி கிண்டலடித்து விடுவார்களோ' என்று மனதில் ஆயிரம் கேள்விகளை சுமந்த படியே செல்லும் போது! சமைக்கத் தெரியாது என்பதை பெருமையாக சொல்லாமல், அன்னமிடுவதில் அன்னையாய் இருக்கும் போது!

தன்னலமில்லாத, செயற்கைத் தனமில்லாத எல்லா பெண்களுமே அழகு தான்!

**தமிழ் ஆசிரியருக்கு ஆங்கில புலமை அசாத்தியம் தானே!**

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த நெடுவாக்கோட்டை என்னும் சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் திரு.அ.தட்சிணாமூர்த்தி.இவர் முதல் தலைமுறை பட்டதாரி. சிறந்த ஆசிரியர், தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றாசிரியர், செவ்விலக்கியப் பிரதிகளை நுண்மையாகப் பயின்றவர், சங்கப் பிரதிகள் குறித்த ஆய்வாளர், உரையாசிரியர், செவ்விலக்கியப் பிரதிகளை மொழிபெயர்த்தவர். இவரின் இந்த அரும் பணிகளுக்காக சாகித்திய அகாடமி 'பாஷா சம்மான்' விருது வழங்கியுள்ளது.



தமிழாசிரியராக இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது தட்சிணாமூர்த்தியின் சிறப்பு. ஆங்கிலத்தை முதல் மொழியாகப் பயின்றவர்கள் மட்டுமே பரவலாக மொழியாக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழை முதல் மொழியாகக் கொண்டு மொழியாக்கத்தில் ஈடுபட்டு, சாதனை படைத்தவர்களில் தட்சிணாமூர்த்திக்கு முதன்மையான இடமுண்டு.



சங்க இலக்கிய நூல்களைப் போலவே ஆறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இவரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவரது திருக்குறள் மொழிபெயர்ப்பு குறிப்பிடத்தக்கது. ஆகமொத்தம் 32 தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பெரும் சாதனை படைத்திருக்கிறார்.

**சலுகைகள் வியாபாரத்தை தூக்கி நிறுத்துமா?**

தங்களுடைய வியாபாரம் தொழில் ஆகியவை மக்களிடையே சென்றடைய சில நுணுக்கங்களை வியாபார நிறுவனங்கள் செயல்படுத்துவது வழக்கம். ஒரு ரூபாய்க்கு பத்திரிக்கை தந்து சில வருடங்கள் கழித்து அது மக்களிடையே பிரபலமான உடன் வழக்கமான விலையை வைத்து இன்று விற்பனையாவது நாம் அறிந்ததே. செல்பேசி நிர்வாகம் சலுகை அறிவித்து பின்னாளில் அதை அதிக அளவுக்கு உயர்த்தியதையும் மறப்பதற்கு இல்லை.

அதைப்போல சமீபத்தில் சென்னையில் டீக்கடை ஒன்றை துவக்கியவர்கள் மக்களை கவரும் விதமாக இன்றைய அத்தியாவசிய தேவையான தக்காளி ஒரு கிலோ கொடுத்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

"சென்னை கொளத்தூர் கணபதி ராவ் நகரில் உள்ள டீக்கடைக்காரர் ஒருவர் ஒரு டீ வாங்கினால் ஒரு கிலோ தக்காளி இலவசம் என்று அறிவிப்பை வெளியிட்டார். இதனைத்தொடர்ந்து, மக்கள் கூட்டம் டீக்கடையில் அலைமோதியது.

"முதலில் வரும் 100 டோக்கனுக்கு மட்டும் தான் தக்காளி இலவசம் என்று கூறி அவர்களுக்கு மட்டும் தக்காளி வழங்கினார்.



# உன்னைச் சுற்றி உன் வாழ்க்கை நிலை!

கடவுளிடம் கேட்டேன், என்னோட வாழ்க்கையை நான் எப்படி வழி நடத்துவது என்று...கடவுள் சொன்னார்,

உன் அறையை சோதனை செய் உனக்கு பதில் கிடைக்கும் என்று...

என்னுடைய அறை எனக்கு எல்லா பதிலும் சொன்னது.

**மேற் கூரை சொன்னதாம்...,**உன் எண்ணங்களைஉயர்வாக வை என்று...

**காத்தாடி(Fan) சொன்னதாம்...,**என்ன மாதிரி குளிர்ச்சியா கூலா இருக்கனும் என்று...

**கடிகாரம் சொன்னதாம்...,** நேரத்தை மதிக்கனும் என்று...

**காலண்டர் சொன்னதாம்...,** என்னை மாதிரி தினமும் உன்னை புதுப்பித்துக்கொள் என்று...

**மணிபர்ஸ் சொன்னதாம்...,** வருங்காலத்துக்காக சேமித்துக்கொள் என்று...

**கண்ணாடி சொன்னதாம்...,** உன்னை மட்டும் பார் என்று...

**விளக்கு சொன்னதாம்...,** என்னை மாதிரி அடுத்தவர் வாழ்வில் ஒளி ஏற்று என்று...

**ஜன்னல் சொன்னதாம்...,** பரந்த மனப்பான்மையாக இரு என்று...

**தரை சொன்னதாம்...,** எப்பவும் கீழே பணிவாக இரு என்று...

**படிக்கட்டு சொன்னதாம்,** வாழ்க்கையில் ஒவ்வொரு படியிலும் ஏறும் போதும் கவனமாக அடி எடுத்து வை என்று... நம்பிக்கையோடு அடியெடுத்து வையுங்கள்...

– இளவரசி

# திட்டமிடலே வெற்றியைத் தரும்!

தவறான திட்டமிடல்களே காலதாமதத்தின் முக்கியக் காரணி, "எதையுமே பிளான் பண்ணிப் பண்ணனும்", னு ஒரு திரைப்படத்தில் நடிகர் வடிவேலு நகைச்சுவையாகக் கூறினாலும், அதுதான் உண்மை.

ஒரு செயலை செய்வதற்கு முன்னரே, அதற்கான காலக்கெடு, தேவையான ஆதாரங்கள் ஆகியவை பற்றியத் தெளிவான திட்டமிடல் வேண்டும்.

சரியாகத் திட்டமிட்டு, நேர்மையான செயல்பாடுகளால் ஒரு செயலை வெற்றிகரமாக குறித்தக் காலத்துக்குள் செய்து முடிக்க முடியும்.

ஒரு சில அரசு அலுவலர்கள், உயரதிகாரிகள் ஆகியோர்கள் எந்த வேலையும் குறித்த காலத்தில் செய்யாமல் காலதாமதமாகவே செய்கின்றார்கள்.

இந்தக் காலதாமதத்தால் தனக்கு எந்த பாதிப்பும் கிடையாது என்கின்ற போது அவர்களுக்கு ஒருவித கவனக்குறைவான மனப்பான்மை உண்டாகிறது.

சரியான திட்டமிடல் இல்லாமல் உண்டாகும் காலதாமதம் கூட ஒருவருக்கு மிகச்சிறந்த அனுபவப் பாடத்தைக் கொடுக்கும்.

காலம் தவறாமை என்பது தலைமைப் பண்புகளில் மிக முக்கியமானது.

ஒரு இடத்திற்கு மேலதிகாரிகள் சரியான நேரத்துக்கு வந்தால் தான், அவருக்குக் கீழே வேலை செய்பவர்களும் குறித்த நேரத்திற்கு வருவார்கள்.

ஆம் முதலில் பொறுப்பில் உள்ளவர்கள் காலம் தவறாமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

சிக்கலகள் இந்த இடத்தில் இருந்தே தொடங்குவதால், இதைச் சரி செய்து விட்டாலே எல்லா வேலைகளும் சிறப்பாக நடைபெறும். காலம் தவறாமைக்கு மற்றொரு முக்கிய எதிரி "தள்ளி வைத்தல்".

எந்த ஒரு செயலையுமே தள்ளி வைத்தால், நிச்சயமாகஅது காலதாமதத்தில் கொண்டு சேர்த்து விடும்.

எதையும் பிறகு செய்யலாம் என்று தள்ளிப் போடாதீர்கள். செயல்படுவதற்குப் பொருத்தமான நேரம், இதோ இந்த விநாடி தான். சுறுசுறுப்பு என்கிற மருந்தே, "தாமதம் என்ற வியாதியை" வரவிடாமல் தடுக்கும் தடுப்பூசி.

நோய்க்கு மருந்து உண்பதைக் காட்டிலும், தடுப்பூசி போடுவதே அறிவாற்றல் அல்லவா.



எஸ்.சூர்யா

# எது வந்தாலும் எதிர்கொள்வோம்!

நம்முடைய செயல்கள் ஒவ்வொன்றிலும் ஏதோ ஒரு விதத்தில் தடைகள் ஏற்படக்கூடும். அந்தத் தடைகள் எப்படி நேர்ந்தது என்பதை யோசித்துக் கொண்டிருப்பதை விட அந்த தடைகளை எப்படி தாண்டி செல்வது என்பதை யோசித்தோமானால் மன உளைச்சல்கள் நிச்சயம் குறைந்து விடும் .அடுத்த கட்டத்துக்கு நம்மை நகர்த்திச் செல்லும்.

அதற்கு நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ள சில உறுதிமொழிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிறரின் முடிவுகளை அப்படியே ஏற்காதீர்கள். தவறாக இருந்தால், கேள்வி கேட்டுப் பழகுங்கள். அதை விடுத்து சொல்பவர் நமக்கு வேண்டியவராயிற்றே, நமக்கு மேல் அதிகாரி ஆயிற்றே என்று எதற்கெடுத்தாலும் நீங்கள் சொல்வது சரிதான் என்று நடந்தால் நம்மால் எந்த முடிவையும் தனியாக எடுக்க முடியாமல் மாட்டிக் கொள்வோம்.

நடந்து முடிந்த கடந்த துன்ப காலத்திலேயே பயணித்து கொண்டு தேவதாஸ் போல சுற்றி கொண்டு இருக்காதீர்கள். அது தந்த பாடத்தை மட்டும் நினைவில் கொள்ளுங்கள் போதும்.

எந்த ஒரு பயணத்திற்கும் பாதையும் இலக்கும் இருக்க அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று பயணிக்காமல் உங்கள் இலக்கு என்னவோ, அதில் தெளிவாய் இருங்கள்.





பிரச்னைகளிலிருந்து தப்பிக்க முயலாதீர்கள். அவற்றை எதிர்கொண்டு சரி செய்யுங்கள்.

நீங்கள் செய்த எந்த தப்புக்கும் சாக்கு சொல்லி தப்பிக்கப் பார்க்காதீர்கள். ஏனென்றால் ஒரு உண்மையை நினைவில் வைத்துக் கொள்ளலாம் ஆனால் பொய்யை மறைக்க மேலும் மேலும் பொய் சொல்ல வேண்டி இருக்கும் .எனவே தைரியமாக நடந்ததை சொல்வதில் தயக்கம் காட்டாதீர்கள்.

நிகழ்காலத்தில், நேர்மையாக துணிச்சலாகவாழ முயற்சி செய்யுங்கள். பயப்படாதீர்கள்.

நம் கையை மீறி எதுவும் போகாது. அப்படியே போனாலும் மீண்டு வந்து விடலாம் என்று உறுதியாக நம்புங்கள்.

செயலை செய்யுமுன் நன்றாக யோசித்து முடிவு எடுங்கள். ஒரு திட்டம் தடை படுவதற்கு காரணமே அதை ஆரம்பித்துவிட்டு அதை தொடரலாமா வேண்டாமா என்று அரை கிணறு தாண்டியதைப் போல்இருக்கக் கூடாது.

பொய் சொல்லாதீர்கள். நம் மீது நம்பிக்கை போய்விடும். நம்முடைய பயணத்திற்கு அடுத்தவரை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க கூடாது. வந்தால் அவர்களை நினைத்துக் கொண்டு செல்ல வேண்டும் அவர்களை மட்டுமே நம்பிக் கொண்டு செல்லாமல் நம் மீது நாம் நம்பிக்கை வைத்து செல்ல வேண்டும்.

இதையெல்லாம் பின்பற்றினால் உங்கள் பயணம் எளிதாக வெற்றியடையும்.

# முன்னோர்கள் வாழ்ந்த ஆரோக்கிய வாழ்க்கை!



கரியையும் சாம்பல்தூளையும் கொடுத்து பல் விளக்கச் சொன்னபோது, பட்டிக்காடு என இளித்த பற்கள் இன்று வேரற்று போனபோது, ஓடி நின்றேன் சர்வோதயா காதிகிராப்ட் என பல்பொடி வாங்க.

வெந்தயமும் சீகைக்காயும் வடிதண்ணீரில் அரைத்து தேய்த்துக் குளி என்றபோது, பித்துக்குளிகள் என எள்ளி நகையாடி சிக் ஷாம்புவை சிக்கென பிடித்து இன்று வெண்கேசம் வந்தபின்பு ஓடுகின்றேன் சீகைக்காய் வாங்க..

பாசிப் பயறோ கடலை மாவோ அரைத்துக்குளி என்ற போது, லிரில், லக்ஸ் சினிமா நட்சத்திரங்களின்அழகு சோப் என நட்சத்திரங்கள் கைகாட்டிய கட்டிகளை எல்லாம்போட்டு தோள் சுருங்கி வயோதிகம் தெரிந்த பின்பு, ஓடுகின்றேன் பயத்த மாவு அரைக்க.

இருமலோ தும்மலோ வந்தபோது துளசி தூதுவளை சுக்கு மிளகுபோட்டு கசாயம் தந்தபோது, முகத்தை சுளித்து காஃப் சிரப் குடித்து தைராய்டு வரை சென்ற பின்பு, ஓடுகின்றேன் துளசி, தூதுவளைச் செடி வளர்க்க.....

வயிற்று வலி என்றபோதுவெறும் வயிற்றில் வெந்தயக் களியோ கற்றாழைச் சாறோ கொண்டு வந்து தந்தபோது சீறி தூக்கி எறிந்து, ப்ருஃபென்னும் பெயின்கில்லரும் போட்டு கருப்பை பழுதடைந்த பின்பு, ஓடுகின்றேன் கற்றாழை வளர்க்க......


நல்லெண்ணெய் செக்கில் ஆட்டி மணமாய் தந்தபோது, சன்ஃபிளவர் ஆயில் பார் முகம் காட்டும் தூய்மை எனக் கூறி முகத்தில் அறைய பதிலுரைத்துவிட்டு, இன்று உடல் நோய்க்கு இடமாக ஓடுகின்றேன் செக்கு நோக்கி ......

மண்பானை சமையல் மண்பானை குளிர் நீரை எல்லாம் மாற்றி விட்டு, ஆர்வோ வாட்டர் என புழு பூச்சி கூட வாழத்தகுதி அற்ற நீரைக்குடித்து குடித்து சவமானபின்பு ஓடுகின்றேன் மண்பானை வாங்க.....

படித்த தலைமுறை எனும் நாகரீகத்தில் திளைத்து குருகுலக் கல்வியை கோடிக்கணக்கான ரூபாய் கல்வியாக்கி, கொல்லைத்துளசி வைத்தியம் மறந்து, மாடிகளில் குளீருட்டப்பட்ட அறைக்கு இலட்ச இலட்சமாய்க் கொட்டி, நடைப்பிணமாக வாழ்வில் எங்கே சுதந்திரம் ஏது சுகாதாரம் என்று எங்கெங்கோ திரிந்து அலைகிறேன்.....

"மூத்தோர் சொல்லும் முதுநெல்லிக்காயும் முன்னே கசக்கும்,பின்னே இனிக்கும்"

ஆரோக்கியமாக வாழ ஒரே வழி நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நாம் பின் தொடர்வதே!


@₹64L*
ONWARDS
KRM
99 DELIGHTS
CHALLENGE
2 & 3 BHK LUXURY
LAKE VIEW
APARTMENTS
99 DELIGHTS
Contact Us: 9003 454 454
www.krmhomemakers.com

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/ 2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 August 2023



# இலங்கையில் ஆசிரியர்!

தொழில் நிமித்தமாக இலங்கை சென்ற மித்ரா குழும நிறுவன தலைவரும் மித்ரா டைம்ஸ் மாத இதழ் ஆசிரியருமான திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்கள் மரியாதை நிமித்தமாக இலங்கை அதிபர் திரு..ரணில் விக்ரமசிங்க அவர்களை சந்திக்கும் வாய்ப்பை பெற்றார். பா.ஜ.க தமிழ்நாடு துணைத் தலைவரும் தொழிலதிபருமான திரு.எம்.சக்கரவர்த்தி உடன் உள்ளார்.



Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY